UNITY HOPE

POPE FRANCIS SINGAPORE 2024

# திருத்தந்தை பிரான்சிசுடன்
# ஒரு மகிழ்வான பயணம்

**பன்னிரண்டு முக்கிய ஆவணங்களை ஆராய்தல்**

*12 வாரக் குழு உருவாக்கத் தொடர்*

Content used with permission from James H. Kroeger, MM



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிங்கப்பூர் வருகையை முன்னிட்டு, புதிய நற்செய்தி அறிவிப்புக்கான அலுவலகமும் (ONE), சிங்கப்பூர் கத்தோலிக்க இறையியல் நிறுவனமும் (CTIS) இணைந்து, அருள்தந்தை ஜேம்ஸ் க்ரோகர் எழுதிய திருத்தந்தை பிரான்சிசுடன் ஒரு மகிழ்வான பயணம் என்ற நூலை தங்களது குழு உருவாக்க ஆதாரமாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்நூலில் அவர் நம் திருத்தந்தையின் பன்னிரண்டு முக்கிய ஆவணங்களைத் தொகுத்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸின் ஆழமான நுண்ணறிவுகளை ஆராய வாசகர்களை ஈர்க்கும் வகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை அவருடைய எண்ணங்களை நம்பிக்கையோடு பற்றிக்கொள்ளவும், அவருடைய ஞானத்தைப் புரிந்து கொள்ளவும், பாராட்டவும் வழிவகுக்கிறது. பன்னிரண்டு அமர்வுகளில் இந்த ஆவணங்களைப் பற்றி அறிவதன் வழியாக, திருத்தந்தை பிரான்சிஸின் தொலைநோக்கையும் திருத்தூதராக வழிகாட்டுதலையும் நீங்கள் நன்கு அறிந்து கொள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்நூல் பங்கு நிறுவனங்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும், ஆலயப் பணிக்குழுக்களுக்காகவும், திருஅவைச் சமூகங்களுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் குழுக்களாக ஒன்று கூடி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இம்மண்ணில் காலடி வைக்க வரவேற்க நம் மனதையும் இதயத்தையும் தயார் செய்வோம்!

இந்தக் குழு உருவாக்க நூலில் அருள்தந்தை ஜேம்ஸ் க்ரோகர் அவர்கள் தனது உள்ளடக்கத்தைப் பயன்படுத்த எங்களை அனுமதித்ததற்காக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

OFFICE FOR THE NEW EVANGELISATION

CATHOLIC THEOLOGICAL INSTITUTE OF SINGAPORE
CTIS
FIDES ET RATIO
EST 2013

# ஆசிரியரைப் பற்றி...

மேரிக்னோல் மறைச்சபையைச் சார்ந்த அருள்தந்தை ஜேம்ஸ் க்ரோகர் 1970 முதல் 2022 வரை ஆசியாவின் பிலிப்பைன்ஸ் மற்றும் பங்களாதேஷின் பல்வேறு பங்குத் தளங்களில், குறிப்பாகக் கல்வித் துறையில், குரு மாணவர்களையும், மறைக்கல்வி ஆசிரியர்களையும், பொதுநிலைத் தலைவர்களையும் உருவாக்குவதிலும், சிறந்த மறைப்பணியாற்றியவர். அவர் உரோமை நகரில் உள்ள கிரகோரியன் பல்கலைக் கழகத்தில் மறைப்பணியியலில் முதுகலைப் பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றவர். கிறிஸ்துவயியல், ஆலயயியல், மறைப்பணியியல், வத்திக்கான் சங்கம், ஆசிய இறையியல், திருத்தந்தை பிரான்சிஸ் பற்றி ஆய்வு ஆகியவற்றில் சிறப்பிடம் பெற்றவர்.
தொடர்பு: jhkroeger@gmail.com

அருள்தந்தை க்ரோகர் ஆசியா முழுவதும் இறையியல், மறைப் பணியியல், மறைக்கல்வி பற்றி ஏராளமான நூல்களையும் கட்டுரைகளை தயாரித்து வெளியிட்டுள்ளார். மேரிக்னோலில் உள்ள ஆர்பிஸ் நிறுவனம் இவரது கீழ்காணும் நூல்களை வெளியிட்டுள்ளது: திருத்தந்தை பிரான்சிசுடன் நடத்தல்: அன்றாட மொழியில் அதிகாரப்பூர்வ ஆவணங்கள்; மறைப்பணியின் பரிசு: நேற்று, இன்று, நாளை; ஒருமுறை ஆசியாவில்: நல்லிணக்கமும் அமைதிக் கதைகளும்; மற்றும் மறைப்பணியை வாழ்தல்: இன்று நற்செய்தி அறிவிப்பதில் உள்ள சவால்கள்.



Used with permission from Fr. James H. Kroeger, MM

Extracts reproduced from the original publication by Faith Alive Books
ISBN-13: 978-0-9998944-2-2

Copyright © 2024 by Fr. James H. Kroeger, MM

The original documents on which these summaries
are based can be found at www.vatican.va

Queries regarding rights and permissions should be addressed
to publisher Dan Pierson at pierson.dj@gmail.com
or to the author at jhkroeger@gmail.com

Subjects: Catholic Church–Doctrines. | Christian Ministry
| Christian Pastoral Resources | Francis, Pope, 1936–
Classification: BX1751.3 K76 2024 (print)

# பொருளடக்கம்


5 முன்னுரை – பேரருள்தந்தை ஜேம்ஸ் இயோ

6 இந்த நூலைப் பயன்படுத்தும் முறை

7 அமர்வின் வடிவம்

8 திருத்தந்தையின் ஆவண வகைகளை அறிதல்

11 ஒரு முன்னோட்டம்

12 1. நம்பிக்கையின் ஒளியில் நடத்தல் *(Lumen Fidei)*

16 2. நற்செய்தியின் மகிழ்வில் வாழ்தல் *(Evangelii Gaudium)*

20 3. இறைவனின் எல்லையற்ற இரக்கத்தை அறிக்கையிடுதல் *(Misericordiae Vultus)*

24 4. நம் பொது தாயகத்தைப் பாதுகாத்தல் *(Laudato Sí')*

28 5. அன்பின் மகிழ்வைப் பரப்புதல் *(Amoris Laetitia)*

32 6. மகிழ்வில் அக்களித்தல் – என்றென்றும் *(Gaudete et Exsultate)*

36 7. இன்றைய இளையோருடன் பயணித்தல் *(Christus Vivit)*

40 8. அமசோனிய திருஅவையைக் கண்டறிதல் *(Querida Amazonia)*

44 9. சகோதரத்துவத்தையும் நட்பையும் வளர்த்தல் *(Fratelli Tutti)*

48 10. நமது வழிபாட்டு உருவாக்கத்தைத் தொடர்தல் *(Desiderio Desideravi)*

52 11. அவசரக் காலநிலை நடவடிக்கைக்கு அழைப்பு *(Laudate Deum)*

56 12. இறைவனின் இரக்கமுள்ள அன்பை நம்புதல் *(C'est la Confiance)*

60 இறுதித் தொகுப்பு

63 நன்றியறிவிப்புகள்

# முன்னுரை

கத்தோலிக்க திருஅவையின் ஒரு அங்கமாக இருப்பதன் நோக்கம் என்ன என்பதை திருத்தந்தை பிரான்சிஸின் அவர்களின் சிங்கப்பூர் வருகை நமக்கு ஒரு நல்ல நினைவூட்டலாகும். ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும் திருஅவை என்பதே அதன் பண்புகள். கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி எண் 866-870 இவ்வாறாக இதை விளக்குகிறது:

ஒரே திருஅவை: நம் திருஅவை ஒரே எதிர்நோக்குக்காக, ஒரே இறைவனை ஏற்று, ஒரே நம்பிக்கையை அறிக்கை செய்து, ஒரே திருமுழுக்கில் பிறந்து, ஒரே உடலாக, ஒரே ஆவியால் உயிர் அளிக்கப்படுகிறது.

புனிதத் திருஅவை: மிகவும் புனிதமான இறைவனே நம் திருஅவையின் ஆசிரியர், கிறிஸ்துவே அவளது மணமகன், அவளைப் புனிதமாக்கத் தன்னையே கையளித்தார், தூய ஆவியார் அவளுக்கு உயிரளிக்கிறார்.

கத்தோலிக்கத் திருஅவை: நம்பிக்கையின் முழுமையை நம் திருஅவை அறிவிக்கிறாள். அவள் மீட்பின் வழிமுறைகளின் முழுமையை தன்னிலே தாங்கி, அதை நிர்வகிக்கிறாள். அவள் எல்லா மக்களிடமும் அனுப்பப்பட்டு, எல்லா மனிதரிடமும் பேசி, எல்லா வேளைகளிலும் சூழ்ந்திருக்கிறாள்.

திருத்தூதர் வழிவரும் திருஅவை: நிலைத்திருக்கும் அடித்தளமான ஆட்டுக்குட்டியின் பன்னிரண்டு திருத்தூதர்களின் மீது அவள் கட்டப்பட்டிருக்கிறாள், பேதுரு மற்றும் மற்றத் திருத்தூதர்கள் வழியாகவும், அவர்கள் வழிவரும் வாரிசுகளான திருத்தந்தை, கர்தினால்கள் வழியாகவும், கிறிஸ்து அவளை ஆளுகிறார்.

திருத்தந்தை பிரான்சிசுடன் ஒரு மகிழ்வானப் பயணம் என்ற நூலை வெளியிட எங்களுக்கு அனுமதி அளித்ததற்காக, சிங்கப்பூர் கத்தோலிக்க இறையியல் நிறுவனமும், புதிய நற்செய்தி அறிவிப்புக்கான அலுவலகமும் அருள்தந்தை ஜேம்ஸ் க்ரோகர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த நூலில் உள்ள நம் ஆசீரியத்தின் சேகரிக்கப்பட்ட படைப்புகள் கத்தோலிக்கர்களுக்கு நம் திருஅவையின் தோற்றம், இயல்பு மற்றும் மறைபணியைப் புரிந்து கொள்ள உதவும் என எண்ணுகிறோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகைக்கான ஆன்மீகத் தயாரிப்பின் ஒரு பகுதியாக, நமது கத்தோலிக்கர்கள் இந்த நூலைப் படிக்கவும், குழு விவாதங்களுக்கு இதைப் பயன்படுத்தவும் நான் ஊக்குவிக்கிறேன்.

பேரருள்தந்தை ஜேம்ஸ் இயோ PhD, STL
அதிபர், சிங்கப்பூர் கத்தோலிக்க இறையியல் நிறுவனம்



## இந்த நூலைப் பயன்படுத்தும் முறை

இந்த நூல், நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 12 முக்கிய ஆவணங்களை உள்ளடக்கிய 12 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. உங்கள் குழுவோடு நீங்கள் வாரத்திற்கு ஒருமுறை ஒன்று கூடி, ஒவ்வொரு அமர்விலும் ஒரு அதிகாரத்தை வாசித்து விவாதிக்கலாம்.

ஒவ்வொரு அமர்விலும் நல்ல தொடர்பை வளர்க்கவும், நேரத்தைக் காக்கவும் வெவ்வேறு குழு உறுப்பினர்கள் பொறுப்பை ஏற்க முன்வரலாம்.

ஒவ்வொரு அமர்வின் காலமும் சுமார் இரண்டு மணி நேரம் நீடிக்கலாம்.

ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் அடுத்த அமர்விற்கான நேரமும் இடமும் அறிவிக்கப்பட வேண்டும்.

# அமர்வின் வடிவம்

### தொடக்கச் செபம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆவணத்தைப் பற்றிய சிந்தனையையும், திறந்த மனப்பான்மையுடன் ஒவ்வொருவரும் பதில் அளிக்கவும், அனைவரும் ஒன்றாக இணைந்து தொடக்க செபத்தை சொல்லவும்.

▼

### ஆவணத் தொகுப்பு

ஆவணத் தொகுப்பை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். வெவ்வேறு உறுப்பினர்கள் வெவ்வேறு பகுதிகளை வாசிக்க முன்வரலாம். தொகுப்பை வாசிக்கும் போது, உங்கள் மனதைத் தொட்ட வார்த்தைகள், சொற்றொடர்கள் அல்லது வாக்கியங்களைக் கவனிக்கவும்.

▼

### சிந்தனைக்கானக் கேள்விகள்

அமர்வின் முதல்வர் சிந்தனைக்கானக் கேள்வியை சத்தமாக வாசிக்க வேண்டும். பின்னர், அனைவரும் அதைக் குறித்து சிந்தித்து, அனைவரும் பதிலளிக்க நேரத்தை ஒதுக்க வேண்டும். அடுத்த கேள்விக்கு செல்லும் முன் முதல் கேள்வியை சிந்தித்துப் பகிர வேண்டும்.

▼

### இறுதி செபம்

குழுவில் உள்ள அனைவரின் செபத்துடன் அமர்வு முடிவடைகிறது.

▼

### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

‘விவிலியம் குறித்த அறியாமை கிறிஸ்துவைக் குறித்த அறியாமைக்கு சமம்’ என்றார் புனித ஜெரோம். எனவே, அனைவரும் இங்குள்ள இறைவார்த்தையை மனதில் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

# குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

இரண்டு, மூன்று பேர்
என் பெயரால் எங்கே கூடி
இருப்பார்களோ அங்கே
அவர்கள் நடுவே நான்
இருக்கிறேன்.'
**மத்தேயு 18:20**

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினிடையே பேசும் போதும், செயல்படும் போதும் பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரையை தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசங்களுக்கு உங்களது சிறந்த கவனத்தைக் கொடுங்கள்.

எல்லோரும் ஒன்றாய்
இருப்பார்களாக. தந்தாய்,
நீர் என்னுள்ளும் நான் உம்
உள்ளும் இருப்பது போல்,
அவர்களும் நம்முள் ஒன்றாய்
இருக்கும்படி மன்றாடுகிறேன்.
**யோவான் 17:21**

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

அவர்களுள் பெரியோர்
அவர்கள் மீது அதிகாரம்
செலுத்துகின்றனர்.
உங்களிடையே அப்படி
இருக்கக் கூடாது.
**மாற்கு 10:42-43**

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், யாவற்றையும் அறிந்த மாதிரி அல்லது என்ன செய்ய வேண்டுமென்று பிறருக்கு எடுத்துக் கூறும் வகையிலும், நடந்து கொள்ளக் கூடாது.

என்னைப் பின்பற்ற விரும்பும்
எவரும் தன்னலம் துறந்து
தன் சிலுவையை நாள்
தோறும் தூக்கிக்கொண்டு
என்னைப் பின்பற்றட்டும்.
**லூக்கா 9:23**

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறைவார்த்தை, திருச்சபையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவின்பால் நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசைமாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அழைக்கவும்.

ஏனெனில் நீங்கள் பேச
வேண்டியவற்றைத் தூய
ஆவியார் அந்நேரத்தில்
உங்களுக்கு கற்றுத்தருவார்.
**லூக்கா 12:12**

பகிர்ந்து கூற வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ தேவையில்லை.இறை ஆவி இயல்பான கருணை மிகுந்த குணத்துடன் செயல் படுவதற்குக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

உங்கள் ஒளி மனிதர் முன்
ஒளிர்க! அப்போது உங்கள்
நற்செயல்களைக் கண்டு
உங்கள் விண்ணகத் தந்தையை
போற்றி புகழ்வார்கள்.
**மத்தேயு 5:16**

இச்சிந்தனைகள் இறைவனுடைய விருப்பத்தைச் செயல்படுத்தச் சவால் விடுகின்றன. அதாவது நாம் சந்திக்கும் நபர்களிடம் இயேசுவின் அன்பைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. இதற்காக அடுத்த குழு அமர்வில் சிறிது நேரம் செலவழித்து, இதையே சென்ற வாரத்தில் நாம் எவ்வாறு சிந்தித்தோம் என்பதைப் பற்றி ஆராயவும்.

# திருத்தந்தையின் ஆவண வகைகளை அறிதல்

இவ்வுலகில் கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்களை வழிநடத்தக் கடவுள் திருத்தூதர் பேதுருவுக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் நிலையான ஓர் உயர் அதிகாரத்தை அளித்துள்ளார் என்று கத்தோலிக்கர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். பேதுருவின் மறைப்பணியின் வாரிசான திருத்தந்தை, தானும் அனைத்து ஆயர்களுடனும் இணைந்து, அனைவருக்கும் கடவுளின் நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற கிறிஸ்துவின் பணியைத் தொடர திருஅவைக்கான அணுகுமுறைகளை மேற்கொள்கிறார்.

திருஅவைக்குக் கற்பிப்பதும், அதை நிர்வகிப்பதும் நமது திருத்தந்தையின் முதன்மையானக் கடமையாகும். மேலும், ஒரு நாட்டின் தலைவராக இருப்பது தொடர்பானப் பிற பணிகளைக் குறிப்பிட தேவையில்லை. பல நூற்றாண்டுகளாகத் திருத்தந்தையர் திருஅவையில் உள்ளோருக்கும் மற்றவர்களுக்கும் தனது எழுத்தின் வழி நேரடியாகத் தனது தலைமைத்துவத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

திருத்தந்தையர்களின் எழுத்து வகைகள் சிலவற்றைக் அறிந்து கொள்வோம்:

**1. திருத்தூது அரசியலமைப்புகள்** (Apostolic Constitutions) என்பது சட்டம் இயற்றும் தன்மையைக் கொண்டப் புனிதமான ஆவணங்களாகும். இவை திருஅவைக்குரிய சட்டங்கள், படிப்பினைகள், கட்டமைப்புகள் போன்றவற்றை அறிவிக்கவோ, மாற்றியமைக்கவோ திருத்தந்தையால் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. திருத்தந்தை 12ம் பயஸ் 1950ம் ஆண்டு வரையறுத்த அன்னை மரியாவின் அனுமானக் கோட்பாடு (Munificentissimus Deus).



**2. திருத்தந்தையின் சுற்றறிக்கைகள்** (Papal Encyclicals) என்பது அனைத்து கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களுக்கும் எழுதப்படும் நீண்ட கடிதங்களாகும். இவை திருத்தந்தை நமக்குக் கற்பிக்க விரும்பும் ஒரு தலைப்பில் மிகுந்தக் கவனம் செலுத்தும். சுற்றறிக்கைகள் பெரும்பாலும் மறைக்கல்வி ஆவணங்களாக இருக்கும். எ.கா. கிறிஸ்தவர்கள் இயற்கைச் சூழலைப் பராமரிக்க நம் திருத்தந்தை பிரான்சிஸ் 2015ம் ஆண்டு விடுத்த அழைப்பு (Laudato Si).

**3. திருத்தூது அறிவுரைகள்** (Apostolic Exhortations) பொதுவாக ஆயர்கள் ஒன்றித்தலைத் தொடர்ந்து எழுதப்படும் மறைப்பணி மடல்கள் ஆகும். இதில் ஆயர்கள் ஒன்றித்தலின் போது ஏற்பட்ட விவாதங்களையும், அதன் பலன்களையும், முடிவுகளையும் திருத்தந்தை ஒருங்கிணைத்து வெளிப்படுத்துகிறார். எ.கா. திருஅவையில் பொது நிலையினரின் பணி குறித்து திருத்தந்தை 2ம் ஜான் பால் 1988ம் ஆண்டு எழுதிய மடல் (Christifideles Laici). சில வேளைகளில், திருத்தந்தை ஆயர்கள் ஒன்றித்தல் இல்லாமலேயே திருத்தூது அறிவுரை வழங்க முடியும்.

**4. திருத்தூது மடல்கள்** (Apostolic Letters) திருஅவையில் உள்ளக் குறிப்பிட்ட குழுக்களுக்கு அல்லது அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும், சூழ்நிலைகளைப் பொறுத்து, பலவிதமான நோக்கங்களைக் கூறி எழுதுவது. எ.கா. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் 2010ம் ஆண்டு புதிய நற்செய்தி அறிவிப்புக்கு திருத்தந்தையின் மன்றத்தை நிறுவியது (Ubiqumque et Semper).

**5. தன்னிச்சை அறிக்கைகள்** (Motu proprio) என்பது திருத்தந்தை எழுதியக் மடலின் ஒரு வித விளக்க உரையாகும். ஒரு அறிக்கைக்கோ, மறுமடலுக்கோ அல்லது பதில் மனுவிற்கோ திருத்தந்தை தன்னிச்சையாக (ஒருவரின் சொந்தத் தூண்டுதலால்) தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு சில சர்ச்சைகளுக்கு முடிவெடுத்து எழுதுவது. பெரும்பாலும் திருஅவையின் ஒழுங்கு முறையைத் திருத்துவதற்கான ஆணைகள், பணியாளர் நியமனங்கள் பற்றிய அறிவிப்புகள் இவ்வாறு வெளியிடப்படுகின்றன. எ.கா. திருத்தந்தை பிரான்சிஸ் 2023ம் ஆண்டு ஆலயங்களில் நடைபெறும் முறைகேடுகளுக்கு எதிரானப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுவியது (Vos Estis Lux Mundi).

திருஅவையில் நடைபெறுவதைத் அறிய விரும்பும் கத்தோலிக்கர்களுக்கு திருத்தந்தையின் ஆவணங்களைப் பற்றி நன்கு அறிந்திருப்பது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. இன்று இணையத்தின் உதவியால் அனைத்து திருத் தந்தையர்களின் ஆவணங்களை அணுகுவது மிகவும் எளிது. ஒரு திருத்தந்தை என்ன எழுதுகிறார் என்பதைப் படித்து புரிந்துகொள்வது மட்டுமல்ல, அதை எப்படி எழுதுகிறார் என்பதும் முக்கியம். திருத்தந்தையின் ஆவணங்களிலுள்ள தொனி அவர் கற்பிக்க விரும்புவதில் குறிப்பிடத்தக்கப் பகுதியை வெளிப்படுத்துகிறது! வாசித்துப் பயனடையுங்கள்!


miserando atque eligendo
chosen through mercy
இரக்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

# ஒரு முன்னோட்டம்

திருத்தந்தையர்களுக்குப் பல தலைப்புகள் உள்ளன, சில பாரம்பரியமானவை, சில பிரபலமானவை. பாரம்பரிய தலைப்புகளில், இறைப்பணியாளர்களின் பணியாளன் என்ற தலைப்பை ஒருவேளை திருத்தந்தை பிரான்சிஸ் விரும்பலாம். சில பிரபலமானத் தலைப்புகளில் இருந்து 'இரக்கத்தின் திருத்தந்தை' என்பதை அவர் தேர்ந்தெடுக்கலாம். ஏனெனில், இரக்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (miserando atque eligendo) என்ற தனது பொன்மொழியில் இந்த நற்பண்பை அவர் இணைத்துள்ளார். பிரான்சிஸ் அவர்களின் சொல்லிலும் செயலிலும் மட்டுமல்ல அவரது ஆவணங்களிலும் நாம் தொடர்ந்து இந்த இரக்கத்தைக் காணலாம். உண்மையில், இயேசு 'இரக்கத்தின் அன்னையிடமிருந்து மனுவுருவான இரக்கம்' (MV 24) என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

2013ம் ஆண்டு மார்ச் 13ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட நமது இரக்கமுள்ள திருத்தந்தை பன்னிரண்டு ஆண்டுகளாக இறை மக்களை வழிநடத்தி வருகிறார். இந்த மைல் கல்லை நினைவு கூரும் வகையில் இந்நூல், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பன்னிரண்டு முக்கிய ஆவணங்களின் சுருக்கமானக் கண்ணோட்டத்தை நமக்கு அளிக்கிறது. ஆவணத்தின் செழிப்பான முழு ஆழத்தை, அதன் விளக்கத்தை, திருத்தந்தையின் ஞானத்தை, நுண்ணறிவுகளை சுவைப்பதற்கானத் தூண்டுதலை எந்தச் சுருக்கமும் அளிக்க முடியாது என்பதை இந்த எழுத்தாளர் நன்கு அறிந்திருக்கிறார்.

நீங்கள் பொருளடக்கத்தைச் சற்று கவனித்தீர்கள் என்றால், இந்நூலில் நாம் ஆராய இருக்கும் பன்னிரண்டு ஆவணங்கள் எவை என்பது தெரிய வரும்; அவை பன்னிரண்டு அதிகாரங்களாக விளக்கமானத் தலைப்புடன் உள்ளன. இந்நூலில் மேற்கோள் காட்டப்பட்டப் பகுதிக்குப் பின் அடைப்புக்குறிக்குள் காணப்படும் எண்கள் திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய அசல் ஆவணத்தின் பத்திகளைக் குறிக்கிறது. இவை ஆர்வமுள்ள வாசகருக்கு அசல் உரையை எளிதாகத் திருப்பிப் பார்க்க உதவும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எழுத்துக்களில் காணப்படும் செழுமையானப் புதையல்களை எளிதில் புரிந்து கொள்ள இந்த வழிமுறை வாசகர்களுக்கு உதவும் என்பது ஆசிரியரின் விருப்பம். இது ஒரு 'மகிழ்வான பயணம்,' 'வளப்படுத்தும் கண்டுபிடிப்பு,' 'தூய்மையாக்கும் திருப்பயணம்,' என்பதை நிரூபிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்! ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் உங்கள் சிந்தனைக்கானக் கேள்விகளும், தனிப்பட்ட அர்ப்பணிப்பைத் தொடங்க செபத் தூண்டல்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக, அனைவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை ஒரு உன்னத முதன்மை ஆசிரியராகவும், நம்பக வழிகாட்டியாகவும், ஒரு ஆழமான 'கிறிஸ்துவின் எதிர்கொள்தலை' அனைவரும் காண வழிவகுக்கும். 'இந்த தருணத்தில் நான், எல்லா இடங்களிலும் உள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும், இயேசு கிறிஸ்துவுடன் ஒரு புதுப்பிக்கப்பட்டத் தனித்துவ எதிர்கொள்ளலைக் காண, அல்லது குறைந்தபட்சம் அவர் உங்களை சந்திக்கத் திறந்த மனதுடன் அனுமதிக்க அழைக்கிறேன். இதை ஒவ்வொரு நாளும் தவறாமல் செய்ய உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்' என்ற நமது திருத்தந்தையின் இதயப்பூர்வமான அறிவுரையை நாம் அடிக்கடி நினைவு கூர்வோம் (Evangelii Gaudium 3).

# Lumen Fidei

# நம்பிக்கையின் ஒளியில் நடத்தல்

> **நாம் நம்பிக்கை கொண்டுள்ள கிறிஸ்து சாதாரணமானவர் அல்ல; கடவுளின் அன்பின் உச்சகட்ட வெளிப்பாடாக இருக்கிறார்; நாம் துல்லியமாக நம்பிக்கை கொள்ள நம்மோடு இணைந்திருப்பவரும் அவரே. நம்பிக்கை என்பது நாம் இயேசுவைக் காண்பதில் அல்ல, இயேசு தன் சொந்தக் கண்ணால் காண்பவற்றை, அவருடைய பார்வையில் நாமும் காண ஒரு பங்கேற்பு.**
>
> LUMEN FIDEI 18

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, எங்கள் அன்பு மேய்ப்பரானத் திருத்தந்தை பிரான்சிஸ் என்னும் கொடைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த மகிழ்வானப் பயணத்தைத் தொடங்கும் போது, அவருடைய ஞானம், இரக்கம், படிப்பினை, அன்பு ஆகியவற்றிற்கு எங்கள் மனதையும் இதயத்தையும் திறக்க உதவியருளும். இந்தப் பயணத்தில் நீர் எங்களோடிருந்து, திருத்தந்தையின் எழுத்துக்கள் வழியாக நாங்கள் உம்மோடு ஆழமான உறவில் நுழைந்து, எங்கள் நம்பிக்கையில் இன்னும் மேம்பட்டு வாழ்வோமாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

*Lumen Fidei (LF),* நம்பிக்கையின் ஒளி திருத்தந்தை பிரான்சிஸின் முதல் சுற்றறிக்கை. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் 'நம்பிக்கை பற்றிய ஒரு சுற்றறிக்கையின் முதல் வரைவை ஏறக்குறைய முடித்து விட்டார்' என்றும், இந்தத் தொடக்கப் பணிக்காக 'நான் அவருக்கு மிக நன்றியுள்ளவனாக இருக்கிறேன்' என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் ஒப்புக்கொள்கிறார். இங்கு நமக்கு இரு திருத்தந்தைகளிடமிருந்து நம்பிக்கையின் ஆழமான சிந்தனைகளைக் கொண்டத் தனித்துவமான புதையல் உள்ளது.

இந்த ஆவணத்தைப் படிக்கும் போது, திருத்தந்தை பெனடிக்ட் முக்கிய உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தார் என்பது நமக்குத் தெளிவாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-1965) திறக்கப்பட்டதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில், திருத்தந்தை பெனடிக்ட் 2012ம் ஆண்டை 'நம்பிக்கையின் ஆண்டாக' தனது அறிக்கையில் கோடிட்டுக் காட்டியத் தொலைநோக்குடன் இது நன்றாக ஒத்துப்போகிறது.

### சுருக்கமானக் கண்ணோட்டம்:

இந்த அறிக்கையின் அமைப்பு எளிமையானது, நேரடியானது. இதில் ஒரு முன்னுரையும் நான்கு அதிகாரங்களும் கொண்டு, மரியன்னை சிந்தனைகளுடன் முடிவடைகிறது. நம் முன்னோர் நம்பிக்கையை எவ்வாறு பார்த்தார்கள் என்பதை முன்னுரை விளக்குகிறது. 'நம்பிக்கையின் சங்கமான' இரண்டாம் வத்திக்கான் சங்கம், எவ்வாறு இன்றைய சமகால உலகில் நம்பிக்கையை கொண்டு செல்ல முயன்றது என்பதை விவரிக்கிறது. 'இரண்டாம் வத்திக்கான் சங்கம் நம்பிக்கையின் ஒளியை நம் மனித அனுபவத்தின் உள்ளிருந்து ஒளிரச் செய்தது, நமது கால மக்களின் பயணத்துடன் சென்றது' (6).

### நம்பிக்கையின் அடித்தளங்கள்:

நாம் இரக்கமுள்ள கடவுளை நம்புகிறோம் என்றும், கிறிஸ்தவர்கள் எவ்வாறு 'இயேசுவின் கண்களால் பார்க்கவும் அவருடைய மனதால் பகிரவும்' (21) செய்கிறார்கள் என்று அதிகாரம் ஒன்று விவரிக்கிறது. 'நம்பிக்கை நமக்கு முன் வழியைத் திறந்து, காலப்போக்கில் நமது படிகளோடு செல்கிறது. எனவே, நம்பிக்கை என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள விரும்பினால், அது கடந்து வந்தப் பாதையை, நம்பிக்கையாளர்கள் மிதித்தப் பாதையை நாம் பின்பற்றவேண்டும்' (8). 'நம்புதல் என்பது எப்பொழுதும் மன்னித்து ஏற்றுக் கொள்ளும் இரக்கமுள்ள அன்பில் தன்னை நம்பிக்கையோடு ஒப்படைப்பதாகும்' (13) .

அதிகாரம் இரண்டில், நம்பிக்கைக்கும் உண்மைக்கும் இடையே உள்ள நெருங்கியத் தொடர்பை பிரான்சிஸ் சித்தரிக்கிறார். 'நம்பிக்கை முழு நபரையும் துல்லியமாக அன்பிற்குத் திறக்கும் அளவிற்கு மாற்றுகிறது' (26) என அவர் வலியுறுத்துகிறார். 'கிறிஸ்தவ நம்பிக்கை, கடவுளின் முழு அன்பின் உண்மையைப் பறைசாற்றி, அந்த அன்பின் வல்லமைக்கு நம்மைத் திறந்து, நமது மனித அனுபவத்தினுள் ஊடுருவுகிறது' (32).

**சமகால நம்பிக்கை:**

நற்செய்தி அறிவிப்பின் முக்கியத்துவமும், நம்பிக்கையைப் பரப்புவதும் மூன்றாம் அதிகாரத்தின் கருப்பொருள். எல்லா காலக்கட்டத்திலும் நம்பிக்கையின் கொடை பரப்பப்பட்ட வேண்டும். 'உடைக்கப்படாத சாட்சிகளின் சங்கிலி வழியாகத்தான் இயேசுவின் முகத்தை நாம் காண வருகிறோம்' (38). உண்மையில், 'திருஅவை, ஒவ்வொரு குடும்பத்தையும் போலவே, அவளது முழு நினைவுகளையும் தன் பிள்ளைகளிடம் ஒப்படைக்கிறாள்' (40). பிரான்சிஸைப் பொறுத்தவரை, 'நம்பிக்கையின் புனிதம் அதன் மிக உயர்ந்த தன்மையை நற்கருணையில் வெளிப்படுத்துகிறது' (44).

இறுதியாக, நம்பிக்கைக்கும் பொது நன்மைக்கும் இடையிலான தொடர்பை பிரான்சிஸ் நான்காவது அதிகாரத்தில் விளக்குகிறார். 'துல்லியமாக, நம்பிக்கை அன்பின் வழியாய்ச் செயலாற்றுவதால், (கலாத்தியர் 5:6), நம்பிக்கையின் ஒளியானது நீதி, சட்டம், அமைதி ஆகியவற்றின் பணியில் உறுதியாக நிலைத்திருக்கிறது' (51). நம்பிக்கை இயேசுவின் பார்வையைப் பகிர உதவுவதால், உலகிலுள்ள ஏழைகளுடன் துன்பங்களுடன் இணைந்து கொள்கிறோம்.

**நம்பிக்கையை வாழ்தல்:**

திருத்தந்தை பிரான்சிஸ் அன்னை மரியாவின் நம்பிக்கைப் பயணம் பற்றிய சில எழுச்சியூட்டும் சிந்தனைகளுடன் (60) தனது அறிக்கையை நிறைவு செய்கிறார். 'தாயே, எங்கள் நம்பிக்கைக்கு உதவியருளும்! எங்களையோ முழுவதுமாக இயேசுவிடம் ஒப்படைத்து, எங்கள் சோதனையின் போது, சிலுவை நிழலின் அடியில், எங்கள் நம்பிக்கை முதிர்ச்சியடைந்த வேளை, அவருடைய அன்பை நம்பிட எங்களுக்கு உதவியருளும்.

பல நூற்றாண்டுகளாக மக்கள் தங்கள் நம்பிக்கையை (எ.கா. ஆபிரகாம், மோசே, புனித பவுல், அசிசியின் புனித பிரான்சிஸ், கொல்கத்தாவின் புனித அன்னை தெரசா, அன்னை மரியா) எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை இந்த முழு சுற்றறிக்கையும் வெளிப்படுத்துகிறது. நம்பிக்கை என்பது நாம் உண்மையில் செபித்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சிறப்புக் கொடை. அது இன்றைய உலகில் வாழ்வோருக்கு நம்மை உயிருள்ள நம்பிக்கையின் அடையாளங்களாக வெளிப்படுத்தும்.

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ உங்கள் வாழ்வில் வல்லமையான நம்பிக்கையின் சாட்சி யார்? அவர் தனது நம்பிக்கையை எவ்வாறு உறுதியுடன் வெளிப்படுத்தினார்? உதாரணம் தருக.

✦ திருப்பலியிலும் ஆலய நடவடிக்கைகளிலும் பங்கேற்பதைத் தவிர, வேறு எந்த வழிகளில் நான் என் நம்பிக்கையை வெளிப்படுத்த முடியும்?

## செபத் தூண்டல்:

**ஆண்டவரே, நான் உண்மையான 'நம்பிக்கையின் சாட்சிகளாக' இருக்க எனக்கு உதவியருளும்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல,
நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்.
2 கொரிந்தியர் 5 : 7**

# Evangelii Gaudium

# நற்செய்தியின் மகிழ்வில் வாழ்தல்

> **நான் இந்த வேளையில், எல்லா இடத்திலுமுள்ள எல்லா கிறிஸ்தவர்களையும், இயேசு கிறிஸ்துவுடன் ஒரு புதுப்பிக்கப்பட்டத் தனிப்பட்ட எதிர்கொள்ளலை மேற்கொள்ள அழைக்கிறேன். குறைந்தது, அவர் தங்களை எதிர்கொள்ள திறந்த மனதுடன் அனுமதிக்க, ஒவ்வொரு நாளும் தவறாமல் செய்யுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 'இறைவன் தந்த மகிழ்ச்சியிலிருந்து யாரும் விலக்கப்படவில்லை' என்பதால், இந்த அழைப்பு உங்களுக்கல்ல என்று யாரும் நினைக்க வேண்டாம். இதைத் துணிவுடன் மேற்கொள்வோரை இறைவன் ஏமாற்றுவதில்லை; நாம் இயேசுவை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் போதெல்லாம், அவர் ஏற்கனவே திறந்த கரங்களுடன் நமக்காக காத்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்வோம்.**
>
> EVANGELII GAUDIUM 3

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, உமது அன்பை எங்களுக்கு வெளிப்படுத்த உம் திருமகனை இவ்வுலகிற்கு அனுப்பினீர். அவர் உம்மிடம் திரும்பிச் செல்லும் முன், உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பரப்புங்கள் என்று தன் திருத்தூதர்களை அவர் பணித்தார். இன்று இந்தப் பொறுப்பு எங்கள் மீது உள்ளது. நற்செய்தியின் மகிழ்ச்சி என்ற இந்த அறிக்கையை நாங்கள் ஆராயும் போது, மறைப்பணியாற்றும் சீடராக வேண்டும் என்ற உணர்வை எங்களுள் பற்றியெரியச் செய்தருளும். ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

**2013ம் ஆண்டு வெளியிடப்பட்ட நற்செய்தியின் மகிழ்ச்சி *Evangelii Gaudium (EG)* என்ற இந்தத் திருத்தந்தை பிரான்சிஸின் முதல் திருத்தூது அறிவுரை, 50,000க்கும் மேற்பட்ட வார்த்தைகளைக் கொண்ட மிகவும் நீண்ட அறிவுரை. இங்கு அவர் நமது முழு திருஅவைக்கு ஆழ்ந்த மறைப்பணியாற்றும் புதுப்பித்தலை, அதாவது, தூய ஆவியாரின் நெருப்பால் பற்றியெறிந்து துடிப்புடன் நற்செய்தி அறிவிக்கும் சமூகத்தை முன்மொழிகிறார்.**

**'நான் ஒரு 'மறைப்பணியாற்றும் விருப்பத்தை' கனவு காண்கிறேன், அதாவது அது எல்லாவற்றையும் உருமாற்றும் திறன் கொண்ட ஒரு மறைப்பணியாற்றும் தூண்டுதல்' (27). 'திருஅவையின் ஒரு குறிப்பிட்ட உள்நோக்கத்திற்கு இரையாகாமல் இருக்க, திரு அவையில் உள்ள எல்லாப் புதுப்பித்தலும் இதன் குறிக்கோளாக இருக்க வேண்டும்' (27). 'மக்களைச் சென்றடையும் மறைப்பணியே திருஅவையின் அனைத்து நடவடிக்கை களுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்,' (15) என திருத்தந்தை வலியுறுத்துகிறார்.**

### திருத்தந்தை பிரான்சிஸின் தொலைநோக்கு:

**இந்த ஆவணம் திருத்தந்தையின் இறையியல், ஆன்மீகம், மேய்ப்புப் பணி, மறைப்பரப்புப் பணி, பற்றிய பார்வையை சுருக்கமாகக் கூறுகிறது என உறுதியாகக் கூறலாம். திருஅவை 'நிரந்தரமாக மறைப்பணியாற்றும் நிலையில்' இருக்க வேண்டும் என்ற அவரது விருப்பம் (25) கிறிஸ்துவுடனான அவரது ஆழ்ந்த தனிப்பட்ட உறவிலிருந்து வந்தது. மேலும் அவர் 'இந்த வேளையில், எல்லா இடத்திலுமுள்ள எல்லா கிறிஸ்தவர்களையும், இயேசு கிறிஸ்து வுடன் ஒரு புதுப்பிக்கப்பட்டத் தனிப்பட்ட எதிர்கொள்ளலை மேற்கொள்ள' அழைக்கிறார் (3).**

**'நாம் அனைவரும் மறைப்பணியாற்றும் சீடர்கள்' (119); 'நாம் இனி 'சீடர்கள்' என்றோ, 'மறை பரப்புவோர்' என்றோ கூறாமல், 'நாம் அனைவரும் எப்போதும் மறைப்பணியாற்றும் சீடர்கள்' (120) என்பதே திருத்தந்தை பிரான்சிஸின் முக்கிய நுண்ணறிவு. 'மறைப்பணியாற்றும் சீடர்கள் மறைப்பணியாற்றும் சீடர்களுடன் செல்கிறார்கள்' (173). நற்செய்தி அறிவிப்போர் 'கிறிஸ்துவின் மகிழ்ச்சியை' பெற்றிருப்பதால் அவர்களின் வாழ்வு 'உற்சாகத்துடன் ஒளிர' வேண்டும் (10).**

### பிறரை ஈர்த்தல்:

**திருத்தந்தை பிரான்சிஸ் பல இடங்களில் தனது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தி உள்ளார். 'உயிர்ப்பு விழா இல்லாத தவக்காலம் போல் வாழும் கிறிஸ்தவர்களும் உள்ளனர்' (6) எனவும், 'நற்செய்தி அறிவிப்போர் ஒரு இறுதிச்சடங்கிலிருந்து திரும்பி வந்தவராக இருக்கக் கூடாது' (10) எனவும், நாம் ஒருபோதும், 'கவலையுடன், ஏமாற்றமடைந்த அவநம்பிக்கை யாளராகவும், சிடுமூஞ்சியாகவும் இருக்கக் கூடாது' (85) எனவும், அவர் குறிப்பிடுகிறார்.**

**இந்த ஆவணத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் இயேசுவை அவரது சீடராகப் பின்தொடர்வதை ஒரு கவர்ச்சியான அழைப்பாக மாற்றுகிறார்; இது உண்மை. ஏனெனில் 'கிறிஸ்தவராக இருப்பது என்பது ஒரு நெறிமுறைத் தேர்வோ, நம்யோசனையின் விளைவோ அல்ல. மாறாக, அது ஒரு நிகழ்வுடன், நபருடன், வாழ்வுடன் ஏற்பட்ட எதிர்கொள்ளல், நம் வாழ்வுக்கு ஒரு புதிய விடியலையும், தீர்க்கமான திசையையும் காட்டுகிறது' (8); 16ம் பெனடிக்ட்.**

**பிரான்சிஸ் பல மறைப்பணிச் சவால்களை அங்கீகரிக்கிறார்; ஆயினும், 'சவால்கள் சமாளிக்கப்பட வேண்டும்! நாம் யதார்த்தவாதிகளாக இருந்து, நமது மகிழ்ச்சியையும், துணிவையும், எதிர்நோக்கு நிறைந்த அர்ப்பணிப்பையும் இழக்காமல் இருப்போம். நம்மிடம் உள்ள மறைப்பணியாற்றும் வீரியம் பறிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது' (109) என அவர் யதார்த்தமான நம்பிக்கையுடன் இருந்து வலியுறுத்துகிறார்.**

**மறைப்பணியாற்ற பத்து வழிகாட்டிகள்:**

**நற்செய்தியின் மகிழ்ச்சி, கிறிஸ்தவ வாழ்வுக்கும், சாட்சிகளாக இருக்கவும் ஆழ்ந்த ஞானம் நிறைந்தது. முக்கிய கருப்பொருள் நுண்ணறிவுகளை இந்த ஆசிரியர் அடையாளம் காட்ட இது திருஅவையின் மறைப்பணியாற்றும் ஆர்வத்தைப் புதுப்பிக்க பங்களிக்கும்.**

**1. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மறைப்பணியாளர்கள்: 'இயேசுவின் மீட்பளிக்கும் அன்புடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பை' மறைப்பணி கோருகிறது. 'நாம் பெற்ற இயேசுவின் அன்பும், அவர் மீது இன்னும் அதிகமாக அன்பு செலுத்தத் தூண்டும் மீட்பின் அனுபவமே' (264) நற்செய்தி அறிவிப்பதற்கான முதன்மைக் காரணம்.**

**2. மறைப்பணியாற்றும் சீடரின் முக்கிய அடையாளம் மகிழ்ச்சி: மகிழ்ச்சியான நற்செய்தி அறிவிப்பாளர்கள் வெற்றிகரமான பிரச்சாரத்திற்கு பங்களிப்பார்கள். 'இந்த மகிழ்ச்சியால் குறிக்கப் பட்ட நற்செய்தியின் ஒரு புதிய அதிகாரத்தைத் தொடங்கக் கிறிஸ்தவ நம்பிக்கை யாளர்களை நான் ஊக்குவிக்க விரும்புகிறேன்' (1) என்று மனப்பூர்வமான உணர்வுடன் திருத்தந்தை பிரான்சிஸ் எழுதுகிறார்.**

**3. இரண்டாம் வத்திக்கானின் முன்னோக்குகளை ஒருங்கிணைத்தல்: இன்றைய உலகளாவிய மறைப்பணிக்காக 'திருஅவைப் படிப்பினைகளின் மேய்ப்பு விளைவுகளை வெளிப்படுத்துவது முக்கியம்' (38) என்று பிரான்சிஸ் வலியுறுத்துகிறார்.**

**4. திருஅவை வாழ்வில் மறைப்பணியின் மையத்தன்மை: துடிப்புடன் மறைப்பணியாற்றும் திரு அவையை பிரான்சிஸ் தொடர்ந்து ஊக்குவிக்கிறார். முன்னர் குறிப்பிட்டது போல், 'மக்களைச் சென்றடையும் மறைப்பணியே திருஅவையின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்' (15) என்று அறிவிக்கிறார்.**

**5. முற்போக்கானத் தோழமைத் திருஅவை: 'நான், ஆரோக்கியமற்ற, அடைத்து வைக்கப்பட்ட, சொந்தப் பாதுகாப்பில் ஒளிந்து கொண்டிருக்கும் திருஅவையைவிட, தெருக்களில் காயப்பட்டு, புண்பட்டு, அழுக்கில் அவதியுறும் ஒரு திருஅவையையே நான் விரும்புகிறேன்' (49).**

**கூடுதல் வழிகாட்டிகள்:**

**6. இரக்கமே மையமானது: 'இரக்கத்தைச் சுதந்திரமாக வழங்கும் இடமாக திருஅவை இருக்க வேண்டும். அங்கு அனைவரும் வரவேற்கப்பட்டு, நேசிக்கப்பட்டு, மன்னிக்கப்படுவதையும், நற்செய்தியின் நல்வாழ்வை வாழ ஊக்குவிக்கப்படுவதையும் உணர வேண்டும்' (114).**

**7. நற்செய்தி அறிவிப்பில் சமூக ஈடுபாடு: 'ஏழையான கிறிஸ்து மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையே சமூகத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான நமது அக்கறையின் அடிப்படையாகும்' (186).**

**8. பிரபலமான இறைப்பற்று, நற்செய்தி அறிவிப்பதின் வாகனம்: 'பிரபலமான இறைப்பற்று நாம் பெற்ற நம்பிக்கை, ஒரு கலாச்சாரத்தில் எவ்வாறு பொதிந்து, அதனுள் எவ்வாறு தொடர்ந்து கடந்து செல்கிறது என்பதைப் பார்க்க நமக்கு உதவுகிறது' (123).**

**9. நற்செய்தி அறிவிப்பில் உரையாடல்: உரையாடல் பற்றிய ஒரு பெரிய பகுதிக்குள், ஒன்றித்தத் திருஅவையின் உரையாடலையும் (244-249), மதங்களுக்கு இடையிலான உரையாடலையும் (250-254) திருத்தந்தை பிரான்சிஸ் விவாதிக்கிறார்.**

**10. உலகளாவியப் பார்வை:** சந்தேகத்திற்கிடமின்றி, உலகளாவிய ஏராளமான ஆயர்கள் மாநாடுகளின் நுண்ணறிவுகளை மேற்கோளிட்டு, 'நற்செய்தி அறிவித்து, பொறுப்புகளைப் பகிர்ந்து, ஒன்றிணைந்துப் பயணிக்கும் ஒரு திருஅவை' என்ற ஒரு பரந்தப் பார்வையை திருத்தந்தை பிரான்சிஸ் வெளிப்படுத்துகிறார்.

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ மத நல்லிணக்கத்தைப் பேணி மதிக்கும் சிங்கப்பூரில், எந்தெந்த வழிகளில் நற்செய்தி அறிவிக்கப்படுவதை நீங்கள் கவனித்திருக்கிறீர்கள்?

✦ தற்போதைய சூழலில் 'மறைப்பணியாற்றும் சீடர்' என்ற உங்கள் பங்கை எவ்வாறு உணர்கிறீர்கள்? மறைப்பணியாற்றும் உற்சாகத்தை எந்த சவால்கள் குறைக்கும்?

## செபத் தூண்டல்:

**இயேசுவே, நாங்கள் உங்கள் 'மறைப்பணியாற்றும் சீடர்களாக' இருக்க விரும்புகிறோம்...**



## நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்;
தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.
மத்தேயு 28 : 19

# Misericordiae Vultus

# இறைவனின் எல்லையற்ற இரக்கத்தை அறிக்கையிடுதல்

> இரக்கத்தின் மறைபொருளை நாம் தொடர்ந்து சிந்திக்க வேண்டும். இது மகிழ்ச்சி, பரிவன்பு மற்றும் அமைதியின் ஊற்று. நமது மீட்பு அதைச் சார்ந்துள்ளது.
> இரக்கம்: தூய மூவொரு இறைவனின் மறைபொருளை இச்சொல் வெளிப்படுத்துகிறது.
> இரக்கம்: நம்மைச் சந்திக்க வரும் கடவுளின் இறுதியான உச்ச செயல்.
> இரக்கம்: நம் வாழ்க்கைப் பாதையில் வரும் சகோதர சகோதரிகளின் கண்களை நேர்மையாக நோக்கும் ஒவ்வொரு நபரின் இதயத்திலும் வாழும் அடிப்படை சட்டம்.
> இரக்கம்: நாம் பாவம் செய்தாலும் நாம் என்றென்றும் நேசிக்கப்படுவோம் என்ற நம்பிக்கைக்கு நம் இதயத்தைத் திறந்து, கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பாலம்.
>
> MISERICORDIAE VULTUS 2

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, உமது இரக்கத்தின் முகமாக இருந்த உம் அன்புத் திருமகன், விளிம்பிலுள்ளோர், ஒதுக்கப்பட்டோர், வாழ்விழந்தோர் அனைவர் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். இந்த ஆவணத்தைக் குறித்து நாங்கள் சிந்திக்கும் போது, எங்கள் இதயங்களையும் மனதையும் உருமாற்றி, நாங்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்கவும், நாங்கள் தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் உமது இரக்கத்தைக் காட்டவும் அருள் புரியும். ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

திருத்தந்தை பிரான்சிஸிடம் ஏராளமான 'இரக்கப் பொருள்' உள்ளது; இருப்பினும், 2015ம் ஆண்டு அவர் வெளியிட்ட 'இரக்கத்தின் முகம்' *Misericordiae Vultus (MV)* என்ற ஆவணம் ஒரு சிறந்த ஆதாரமாகும். அதில் அவர் இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1965) நிறைவுற்ற ஐம்பதாம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் அந்த முழு ஆண்டை (2015-2016) இரக்கத்தின் ஆண்டாக அறிவித்தார்.

### இரக்கத்திற்கான அழைப்பு:

'நாம் இரக்கத்தின் மறைபொருளை தொடர்ந்து சிந்திக்க வேண்டும். இது மகிழ்ச்சி, சாந்தம் மற்றும் அமைதியின் ஊற்று. இரக்கம் கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பாலம்' (2) என்று 'இரக்கத்தின் திருத்தந்தை' கூறுகிறார். அவர் கிறிஸ்தவர்கள் அனைவரையும் உடல் மற்றும் உளம் சார்ந்த இரக்கச் செயல்கள் வழியாகப் புதுப்பிக்கப்பட்ட நடைமுறைக்கு அழைக்கிறார் (15). 'ஏழை எளியோர் இறை இரக்கத்தின் சிறப்பு அனுபவத்தைப் பெற நற்செய்தியின் இதயத்தினுள் இன்னும் ஆழமாக நுழைவோம்' (15).

தினமும் நாம் 'இரக்கத்தில் வாழ்வது' என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் விருப்பல்ல, அது ஒரு கடமை. இரக்கம் சவால் மிக்கது, எளிதானதல்ல. இரக்கத்தின் கோரிக்கைகள் பெரும்பாலும் சிரமமானவை, கணிக்க முடியாதவை; அவை நமது தனிப்பட்ட திட்டத்தையும் அட்டவணையையும் பாதிக்கும். நம்மிடம் எப்போது இரக்கம் எதிர்பார்க்கப்படும் என்று நம்மால் கணிக்க முடியாது.

### கடவுள், இரக்கத்தின் தந்தை:

நாம் இரக்கம் காட்டப்படும் போது கடவுளின் இதயத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என்று பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். 'நம் தந்தை இரக்கம் நிறைந்தவர்; அவரே ஆறுதல் அனைத்துக்கும் ஊற்று' (2 கொரி 1:3) என்று மறைநூல் தெளிவாக உறுதிப்படுத்துகிறது. நம் தேவன் 'மிகுந்த இரக்கம் உடையவர்' (எபே 2:4), அவர் இரக்கத்தினுள் மூழ்கி விடுகிறார். நாம் நன்கு அறிந்த இயேசுவின் உவமைகளில் ஒன்று, லூக்கா 15:11-32ல் உள்ள 'இரக்கமுள்ள தந்தை' (ஊதாரி மகன்) உவமை. பெருந்தன்மையுள்ள தந்தை தனது இரு மகன்கள் மீதும் தனது அளவுக்கதிகமான அன்பையும், இரக்கத்தையும், பரிவையும் காட்டுகிறார். இரக்கமுள்ள தந்தையின் நிரம்பி வழியும் இரக்கத்தையும், மென்மையையும் இந்த உவமை வெளிப்படுத்துகிறது.

### இயேசு, தந்தையின் இரக்கத்தின் முகம்:

'இரக்கம் அதன் மிக உன்னதமான, முழுமையான வெளிப்பாட்டை மனுவுருவான வார்த்தையில் காணப்படுகிறது. மிகுந்த இரக்கம் உடைய தந்தையின் முகத்தை இயேசு வெளிப்படுத்துகிறார்'. நாசரேத்து இயேசுவில், இரக்கம் உயிருள்ளதாகவும் காணக் கூடியதாகவும் உள்ளது. இயேசு தன் வாழ்நாள் முழுவதும், 'அவரில் அன்பைத் தவிர வேறில்லை, அபரிவிதமான அன்பு... குறிப்பாக பாவிகள், ஏழைகள், ஓரங்கட்டப்பட்டவர்கள், நோயாளிகள், துன்பப்படுவோர் மீது அவர் ஆற்றும் அருஞ்செயல்கள் அனைத்தும் அவர்களது முகத்தில் இரக்கத்தைக் காட்டவே. அவரில் உள்ள அனைத்தும் இரக்கத்தையே பேசும். இரக்கமில்லாத எதுவும் அவரிடம் இல்லை' (8) என பிரான்சிஸ் எழுதுகிறார்.

இயேசு அடிக்கடி 'மக்கள் மேல் பரிவு கொண்டார்' (மத் 9:36). தேவையுள்ளவர்களைக் காணும்போது இரக்கமுள்ள பரிவன்பால் நெகிழ்கிறார். வரி தண்டுபவரான மத்தேயுவை 'என்னைப் பின்தொடர்' என்று அழைத்த போது அவருடைய இரக்கம் நிரம்பி வழிந்தது; அவர் இரக்கம் நிறைந்த அன்புடன் அவரைப் பார்த்துத் தேர்ந்தெடுத்தார்: இரக்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (miserando atque eligendo) திருத்தந்தை பிரான்சிஸின் (மத் 9:9). இரக்கத்தைக் குறித்து இயேசு பல உவமைகளைப் பேசினார்: காணாமல் போன ஆடு, காணாமல் போன திராக்மா, காணாமல் போன மகன் (லூக்கா 15:4-7, 8-10, 11-32).

### திருஅவை, இறை இரக்கத்தின் சமூகம்:

'இரக்கம் என்பது திருஅவை வாழ்வின் அடித்தளம். அவளது மேய்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும் அவளது நம்பிக்கையாளர்களுக்கு அவள் அளிக்கும் மென்மையால் கவரப்பட வேண்டும்; உலகத்திற்கு அவள் ஆற்றும் மறையுரையிலும், சாட்சியிலும் இரக்கத்தின் குறைவு இருக்கவே கூடாது. அவள் காட்டும் இரக்கத்திலும் பரிவன்பிலும் தான் திருஅவையின் நம்பகத்தன்மை எதிர்பார்க்கப்படுகிறது. அவள் வெளிப்படுத்தும் இரக்கத்தின் அறிக்கையிலும் உறுதிமொழியிலும் தான் திருஅவையின் உண்மையான வாழ்வு இருக்கிறது' (11). 'நற்செய்தியின் துடிக்கும் இதயமான இறை இரக்கத்தை அறிவிக்க திருஅவை நியமிக்கப்பட்டுள்ளது, இது ஒவ்வொரு நபரின் இதயத்தையும் மனதையும் அதன் சொந்த வழியில் ஊடுருவ வேண்டும்' (12).

### கிறிஸ்தவர்கள், இறை இரக்கத்தின் மறைப்பணியாளர்கள்:

கடவுளின் இரக்கமுள்ள அன்பு 'எல்லா நிலையிலுமுள்ள எல்லா வயதினருக்கும் நபருக்கும் சாட்சியாக இருக்கிறது' என்று திருத்தந்தை பிரான்சிஸ் அடிக்கடி இரக்கத்தின் கருப்பொருளை வலியுறுத்துகிறார். 'எத்தனை அநீதிகள், போர்கள் போன்ற மனிதாபிமான நெருக்கடிகளுக்கு இன்னும் தீர்வு தேவை என்பதை நாம் கருத்தில் கொள்ள கடவுளின் இரக்கம் மிக அவசியம்' என்று பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். அருள்பணியாளர்களுக்கு (நமக்கும்) பிரான்சிஸ் அடிக்கடி நினைவூட்டுவது: 'இயேசு கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் இரக்கமுள்ளவர்களாக இருப்பதில் ஒருபோதும் சோர்வடையாதீர்கள்! இரக்கம் காட்டுங்கள், பேரிரக்கம்!'

### மரியா, இரக்கத்தின் அன்னை:

இரக்கத்தின் முகம் என்ற ஆவணத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவது: 'இப்போது என் எண்ணங்கள் இரக்கத்தின் அன்னையை நோக்கித் திரும்புகின்றன... மனுவுருவின் ஆழமான மறைபொருளை மரியாவைப் போல வேறு யாரும் ஊடுருவியதில்லை. அவளது முழு வாழ்வும் மனுவுருவான மரியாவைப் முன்னிலையில் வடிவமைக்கப்பட்டது... அவள் தனது இதயத்தில் இறை இரக்கத்தைப் ஒரு புதையலாக வைத்திருந்தாள்... அவளது புகழ் பாடல் (லூக் 1:46-55) இறை இரக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது... சிலுவையின் அடியில் மரியா அன்புச் சீடர் யோவானுடன் சேர்ந்து, இயேசு சொன்ன மன்னிப்பின் வார்த்தைகளுக்கு சாட்சியாக இருந்தார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக, இறை இரக்கம் அடையக் கூடிய இரக்கத்தின் உச்சக்கட்ட வெளிப்பாட்டை நமக்குக் காட்டுகிறது' (24) .

### முடிவுரை:

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இரக்கத்தின் ஜூபிலி செபம் அவரது தொலைநோக்கைச் சுருக்கமாகக் கூறுகிறது: 'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்வே, விண்ணகத் தந்தையைப் போல இரக்கம் உள்ளவர்களாக இருக்க நீர் எங்களுக்குக் கற்றுத் தந்தீர். மன்னிப்பதாலும்

இரக்கத்தாலும் எல்லாவற்றிற்கும் மேலான தனது வல்லமையை வெளிப்படுத்தும் கடவுளும், கண்ணுக்குப் புலப்படாத தந்தையின் முகமும் நீரே. உலகில் உமது கண்ணுக்குத் தெரியும் முகமாக உமது திருஅவை இருக்கட்டும்.'

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ 'இரக்கத்தின் புனிதர்' என்று அழைக்கப்படும் ஓரிருப் புனிதர்களை நீங்கள் குறிப்பிட முடியுமா? அவரது வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக விவரிக்கவும். உங்கள் சொந்த வாழ்வின் அனுபவத்திலிருந்து உங்களுக்குத் தெரிந்த, இரக்கமும் அருளும் கொண்ட ஒருவரை விவரிக்கவும்.

✦ கடவுள் என்னைப் பார்க்கும்போது எப்படி உணர்வார் என்று நான் நினைக்கிறேன்? அவருடைய பொறுமையும் இரக்கமும் நிறைந்த பார்வையை என்னால் ஏற்க முடியுமா?

## செபத் தூண்டல்:

**அருள் நிறைந்த மரியே, இரக்கத்தின் தாயே,**
**நாங்கள் இரக்கம் காட்ட உதவியருளும்...**



## நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்.
மத்தேயு 6 : 12

# Laudato Si'
# நம் பொது தாயகத்தைப் பாதுகாத்தல்

> சில உறுதியான மற்றும் செப உள்ளம் கொண்ட சில கிறிஸ்தவர்கள், யதார்த்தத்தின், நடைமுறைவாதத்தின் சாக்குப்போக்கு சொல்லி, சுற்றுச் சூழலுக்கான நமது அக்கறை பற்றிய வெளிப்பாடுகளைக் கேலி செய்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். சில பொறுப்பற்றவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாமல் சீரற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு இப்போது 'சூழலியல் மாற்றம்' தேவை. இதனால், இயேசு கிறிஸ்துவுடனான அவர்களது எதிர்கொள்ளல் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துடனான அவர்களின் உறவு தெளிவாகும். நாம் கடவுளின் கைவேலைப்பாட்டின் பாதுகாவலர்கள் என்பதை வாழ்வாக்க நல்லொழுக்கம் நமக்கு இன்றியமையாதது; இது கிறிஸ்தவ அனுபவத்தின் விருப்பமோ, இரண்டாம் பட்சமோ அல்ல.
>
> LAUDATO SI' 217

## தொடக்கச் செபம்:

விண்ணகத் தந்தையே, ஆதாம் வழியாக, மனித குலத்தை உமது படைப்பின் பாதுகாவலர்களாக நியமித்தீர். இது நாங்கள் மறந்து போன ஒரு பொறுப்பு, இதன் விளைவாக இப்போது எங்கள் பூமி வேதனையில் ஆழ்ந்துள்ளது. 'புகழ்ச்சி உமக்கே' என்ற இந்த ஆவணத்தை நாங்கள் ஆராயும் போது, நாங்களே எங்கள் பொது தாயகத்தின் பாதுகாவலர் என்ற நிலையை நாங்கள் நினைவில் கொள்வோமாக. ஆமென்.

## ஆவணத் தொகுப்பு:

திருத்தந்தை பிரான்சிஸ் சுற்றுச்சூழலை மட்டுமே மையமாகக் கொண்டு நீண்ட சுற்றறிக்கை ஒன்றை எழுதியுள்ளார்: Laudato Si' (LS) நம் பொது தாயகத்தைப் பாதுகாத்தல். நமது சுற்றுச்சூழல் நெருக்கடியில் இருப்பதாக பிரான்சிஸ் தைரியமாக வாதிட்டு, நடவடிக்கைக்கு அவசர அழைப்பு விடுக்கிறார். 'நமக்குப் பின் வருபவர்களுக்கு, வளர்ந்து வரும் நம் பிள்ளைகளுக்கு நாம் எப்படிப்பட்ட உலகத்தை விட்டுச் செல்ல விரும்புகிறோம்?' (160) என அவர் திட்டவட்டமாக வினவுகிறார்.

பிரான்சிஸ் அசிசியாரின் பாடலை நினைவு கூர்ந்தத் திருத்தந்தை, நம் சகோதரியான இவ்வுலகம், 'கடவுள் அவளுக்கு அளித்தவற்றை நாம் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தி, முறைகேடு செய்து, அவளுக்கு இழைத்த தீங்கின் காரணமாக அவள் இப்போது நம்மை நோக்கிக் கதறுகிறாள்' (2), 'நம் பொது தாயகத்தைப் பற்றி எல்லா மக்களுடனும் உரையாடலில் ஈடுபட விரும்புகிறேன்' (3) என வருத்தப்படுகிறார். இந்த ஆவணத்தில் உள்ள ஆறு அதிகாரங்கள் (ஆறு பத்திகளில் சுருக்கமாக) வழியாக 'உலகளாவிய சூழலியல் மாற்றத்திற்கு' பிரான்சிஸ் அழைப்பு விடுத்து, 'உண்மையான மனித வளர்ச்சிக்கு ஒரு தார்மீகக் கடமை உண்டு' (5), மேலும் நமக்கு 'ஒரு ஒருங்கிணைந்த சூழலியல்' தேவை' என வலியுறுத்துகிறார் (11).

**1. நம் பொது தாயகத்திற்கு என்ன நடக்கிறது?** 'நாம் 'நம் தாயகமான பூமி மேன்மேலும் அசுத்தக் குவியலாகத் தோற்றமளிக்கத் தொடங்குகிறது' (21). 'இந்த பிரச்சனைகள் தூக்கி எறியும் கலாச்சாரத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது' (22). 'மிக உறுதியான சில அறிவியல் சார்ந்த ஒருமித்த கருத்துகளால் முக்கிய மனித நடவடிக்கைகள் சில உள்ளன' (23). அதிலுள்ள சில முக்கிய சிக்கல்கள்: நீர் (27-31), பல்லுயிர் இழப்பு (32-42), மனித வாழ்வின் தரம் (43-47), உலகளாவிய சமத்துவமின்மை (48-52), பலவீனமானப் பதில் (53-59). எனவே, 'நம் பொது தாயகம் மிகவும் சீரழிந்து வருவதைக் காண உண்மைகளை நாம் வெளிப்படையாகக் காண வேண்டும்' (61) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் நேரடியாக வலியுறுத்துகிறார்.

**2. படைப்பின் நற்செய்தி.** 'ஒரு ஒருங்கிணைந்த சூழலியலுக்கும் மனிதகுல முழு வளர்ச்சிக்கும் மதங்கள் செய்யக் கூடிய வளமானப் பங்களிப்பை' பிரான்சிஸ் காண்கிறார் (62). அவர் நமக்குச் சில நுண்ணறிவுகளை வழங்குகிறார்: 'நாம் கடவுளல்ல. நமக்கு முன்பே பூமி இங்கு இருந்தது, வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் அதன் பலனை உறுதிப்படுத்தி, அது நமக்குக் அளிக்கப்பட்டது...' (67). 'நம் திருஅவையின் பணி இயற்கையை பராமரிப்பதற்கான கடமையை அனைவருக்கும் நினைவூட்டுவது மட்டும் இல்லாமல், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதகுலத்தை சுய-அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும்' (79). 'அடிப்படையில் பூமி ஒரு பகிரப்பட்ட சொத்து...' (93) 'எல்லாம் தொடர்பு உடையதெனக்' (92) காண்கிறோம். 'இயற்கையின் மற்ற பகுதிகளுடன் ஆழ்ந்த தொடர்பு கொண்டு' (91), 'இயேசுவின் பார்வையை' (96-100) ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**3. சுற்றுச்சூழல் நெருக்கடியின் மனித வேர்கள்.** 'ஒரு 'மனித வாழ்வையும் செயல்பாடுகளையும் புரிந்து கொள்வதற்கான வழி தவறாகிவிட்டது, நம்மைச் சுற்றியுள்ள உலகத்திற்கு கடுமையானத் தீங்கு விளைவித்துவிட்டது' (101) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் நம்புகிறார். எனவே, 'ஆதிக்கம் செலுத்தும் தொழில்நுட்ப முன்னுதாரணத்தையும், உலகில் மனிதர்களின் நிலையையும், அவர்களது நடவடிக்கை களையும்' (101) ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. நாம் 'சற்று மெதுவாக சிந்தித்து, வேறொரு வழியில் யதார்த்தத்தைக் காண வேண்டும்' (114). 'ஒரு ஏழையின், ஒரு மனிதக் கருவின், ஒரு ஊனமுற்றவரின் மதிப்பை யதார்த்தத்தின் பகுதியாக நாம் ஒப்புக்கொள்ளத் தவறும் போது, இயற்கையின் அழுகுரலைக் கேட்பது கடினம்; எல்லாம் தொடர்புடையது' (117). 'நெறிமுறைகளிலிருந்து துண்டிக்கப்பட்ட தொழில்நுட்பம் அதன் சொந்த வளமையை எளிதில் கட்டுப்படுத்த முடியாது' (136).

**4. ஒருங்கிணைந்த சூழலியல்.** இப்போது நாம் 'ஒரு ஒருங்கிணைந்த சூழலியலின் சிலக் கூறுகளை கருத்தில் கொள்வோம், இது அதன் மனித மற்றும் சமூகப் பரிமாணங்களைத் தெளிவாக மதிக்கிறது' என்று பிரான்சிஸ் கூறுகிறார் (137). 'சுற்றுச்சூழல் சமூகம் என்ற இரு தனித்தனி நெருக்கடிகளை நாம் எதிர்கொள்ளவில்லை. மாறாக, சமூகமும் சுற்றுச்சூழலும் அடங்கிய ஒரே சிக்கலான நெருக்கடியை எதிர்கொள்கிறோம்' (139). சூழலியல் அன்றாட வாழ்வு முழுவதையும் பாதிக்க வேண்டும் (147-155). 'பொதுநன்மை என்றக் கொள்கை, உடனடியாகத் தர்க்கரீதியாகவும் தவிர்க்க முடியாமலும், ஒற்றுமைக்கான அழைப்பாகவும், ஏழை சகோதர சகோதரிகளுக்கு முன்னுரிமையாக வும் மாறும்' (158). 'பொது நன்மை பற்றிய கருத்து எதிர்கால சந்ததியினருக்கும் நீட்டிக்கப் படுகிறது' (159) (தலைமுறைகளுக்கிடையேயான நீதி). 'நமது சொந்த கண்ணியம் ஆபத்தில் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்' (160). ஒருங்கிணைந்த சூழலியல் நமது அடிப்படைக் கொள்கை!

**5. அணுகுமுறையும் செயல்பாடும்.** பிரான்சிஸ் அடுத்ததாக 'தற்போது நம்மை மூழ்கடிக்கும் சுய அழிவின் சூழலிலிருந்து தப்பிக்க உதவும் உரையாடலின் முக்கியப் பாதைகளை கோடிட்டுக் காட்ட' முயல்கிறார் (163). 'ஒருவருக்கொருவர் சார்ந்திருத்தல், உலகைப் பற்றி ஒரு பொதுவான திட்டத்துடன் சிந்திக்க நம்மைக் கட்டாயப்படுத்துகிறது' (164). 'நெருக்கடியின் பல்வேறு அம்சங்களைக் கையாள்வதில் தொலைநோக்கும், புதிய, ஒருங்கிணைந்த, ஒழுங்குமுறையும் கொண்ட அணுகுமுறையின் திறன் கொண்ட ஒரு அரசியல் நமக்குத் தேவை' (197). மதங்கள் அறிவியலுடன் உரையாடலைத் தொடர வேண்டும் (199-201).

**6. சூழலியல் கல்வியும் ஆன்மீகமும்.** 'ஒரு பெரிய கலாச்சார, ஆன்மீக, கல்விச் சவால் நம் முன் உள்ளது. அது புதுப்பித்தலின் நீண்ட பாதையில் நாம் பயணிக்க வேண்டும்' (202) என்பதை வலியுறுத்தும். இது 'நுகர்வோர் வாழ்க்கை முறையை' (204) கையாள வேண்டும், 'சூழலியல் மாற்றம்' அவசியம் (216-221). எதிர்நோக்கு இருக்கிறது என்று நம்பும் திருத்தந்தை பிரான்சிஸ் அவரது சிந்தனை 'மகிழ்ச்சியாகவும் கவலை அளிப்பதாகவும்' (246) குறிப்பிடுகிறார். 'ஒருங்கிணைந்த சூழலியலை' ஊக்குவிப்பதில் நம் அனைவரையும் அவரோடு இணையுமாறு அவர் வேண்டுகிறார்.


## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ எளிய வாழ்க்கை முறையை வாழ்வதற்கான அழைப்பிற்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்கலாம்?

✦ சுற்றுச் சூழல் பற்றிய பொறுப்பை உணர நீங்கள் என்ன தனிப்பட்ட, உறுதியான நடவடிக்கைகள் எடுக்க முடியும்? நம் பொது தாயகமான பூமியைப் பாதுகாக்க, நமது நம்பிக்கை எவ்வாறு பங்களிக்கும்?

## செபத் தூண்டல்:

**புனித பிரான்சிஸ் அசிசியாரே, எங்கள் பொது தாயகத்தை பராமரிக்க நான் உறுதியளிக்கிறேன்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை;
நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.
திருப்பாடல் 24 : 1

# Amoris Laetitia

# அன்பின் மகிழ்வைப் பரப்புதல்

> **இறைவனின் பிரசன்னம் உண்மையான உறுதியானக் குடும்பங்களில் அவர்களின் அன்றாட வாழ்வின் பிரச்சனைகளிலும், போராட்டங்களிலும், மகிழ்ச்சியிலும், எதிர்நோக்கிலும் வாழ்கிறது. பொய் சொல்லியோ போலியாகவோ ஒரு குடும்பத்தில் வாழ்வது நமக்கு மிகவும் கடினம், முகமூடி போட்டு மறைக்க முடியாது. அந்த நம்பகத்தன்மை அன்பால் ஈர்க்கப்பட்டால், அங்கு ஆண்டவர் தன் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் அரசாள்வார். குடும்ப அன்பின் ஆன்மீகம் ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறு உண்மையான சைகைகளாலானது. ஒற்றுமையை ஆழமாக்கும் விதவிதமானக் கொடைகளாலும் எதிர்கொள்ளல்களாலும் கடவுள் அங்கு குடிகொண்டுள்ளார்.**
>
> AMORIS LAETITIA 315

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, உமது ஞானத்தால், குடும்பங்களை எங்கள் முதல் 'அன்புப் பள்ளிகளாக' எங்களுக்குத் தந்தீர். ஆனால் இன்று, எல்லா பக்கங்களிலும் பெரும் சவால்களால் குடும்பங்கள் சூழப்பட்டுள்ளன. வாழ்வில் எங்கள் நிலை எதுவாக இருந்தாலும், அன்பின் மகிழ்ச்சி என்ற இந்த ஆவணம் எங்களுக்கு ஞானத்தின் ஆதாரமாக இருந்து, எங்கள் சமூகங்களில் உள்ள குடும்பங்களுடன் நாங்கள் எப்படிப் பயணிப்பது என்பதை எங்களுக்குக் கற்பிப்பதாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

திருத்தந்தை பிரான்சிஸ் நம் திருஅவைக்கு அன்பின் மகிழ்ச்சி என்ற சிறப்பானதொரு கொடையை வழங்கியுள்ளார். இந்த ஆவணம் குடும்ப அன்பின் மீது கவனம் செலுத்துகிறது. குடும்பம் பற்றி 2014, 2015ம் ஆண்டு நடைபெற்ற ஆயர்கள் ஒன்றித்தலின் சாராம்சத்தை பின்பற்றி, தனது சொந்த மறைபணியின் நுண்ணறிவால் விவாதத்தை வளப்படுத்துகிறார்.

### அன்பின் மகிழ்ச்சியின் புதையல்களை ஆராய்தல்:

'நாம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே இந்த ஆவணத்தின் கண்ணோட்டத்தை வழங்கியுள்ளார். (1) மறைநூல், (2) இன்றைய குடும்பங்களின் நிலை, (3) திருமணம், குடும்பம் பற்றிய திருஅவையின் படிப்பினைகள், (4) திருமண அன்பு, (5) கனிதரும் அன்பு, (6) மேய்ப்பக அணுகுமுறைகள், (7) குழந்தைகளின் கல்வி, (8) இயேசுவின் கோரிக்கைகள், (9) குடும்ப ஆன்மீகம் என்ற அதிகாரங்கள் வழியாகத் தன் ஆழமான நுண்ணறிவையும், ஞானத்தையும் நமக்குப் புதையலாக அளித்துள்ளார்.

### இரக்கமுள்ள மேய்ப்பகத் தொனி:

திருத்தந்தை பிரான்சிஸின் இந்த ஆவணம் நம் திருஅவைக்கு ஒரு முக்கியமான மேய்ப்பகச் செயல்முறையைத் தருகிறது. அவர் திருஅவையின் படிப்பினைகளை மாற்றாமல், அவர் எப்போதும் வலியுறுத்தும் இரக்கத்தையும் பரிவன்பையும் வலியுறுத்தி, தனது மேய்ப்பக ஞானத்தை வெளிப்படுத்துகிறார். 'மனித பலவீனத்தின் மத்தியிலும் தூய ஆவியார் விதைக்கும் நன்மைத் தனத்தைப் பராமரிக்கும் ஒரு திருஅவையை இயேசு விரும்புகிறார் என்று நான் உண்மையாக நம்புகிறேன். ஒரு தாய், தெருவின் சேற்றால் தன் காலணிகள் அழுக்காயினும், தன் குறிக்கோள் நிறைந்தப் படிப்பினைகளை வெளிப்படுத்த, 'எப்போதும் தன்னால் இயன்றதைச் செய்கிறார்' (308). எல்லா சூழ்நிலைகளிலும், 'நற்செய்தியின் இதயத் துடிப்பான இறைவனின் இரக்கத்தைப் பறைசாற்றவே திருஅவை நியமிக்கப்பட்டுள்ளது' (309).

### விவிலியக் கண்ணோட்டம்:

அன்பின் மகிழ்ச்சி என்ற இந்த ஆவணத்தின் முதல் அதிகாரம், யூத, கிறிஸ்தவ திருமண வழிபாட்டு முறைகளுக்கு அடிக்கடி தேர்ந்தெடுக்கப்படும் திருப்பாடல் 128டின் சிந்தனையுடன் தொடங்குகிறது. 'உம் இல்லத்தில் உம் துணைவியார் கனி தரும் திராட்சைக் கொடி போல் இருப்பார்; உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மைச் சூழ்ந்திருப்பர். நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீராக!' குடும்பம் என்பது 'பிள்ளைகள் நம்பிக்கையில் வளர்க்கப்படும் இடம்' (16). 'ஒவ்வொரு குடும்பமும் நாசரேத்துத் திருக்குடும்பச் சின்னத்தை நோக்க வேண்டும்' (30).

### இயேசுவும் குடும்பங்களும்:

'விவிலியத்தில் குடும்பங்கள், பிறப்புகள், காதல் கதைகள், குடும்ப நெருக்கடிகள் பல நிறைந்துள்ளது' (8). உண்மையில், 'இயேசு தாமே ஒரு அடக்கமான குடும்பத்தில் பிறந்தவர்'; பேதுருவின் மாமியார் நோயுற்றிருந்த போது அவரது வீட்டிற்குச் சென்றார்... மத்தேயு வீட்டுக்கும், சக்கேயு போன்ற வரிதண்டுவோர் வீட்டுக்கும் சென்றார்... பரிசேயரான சீமோனின் வீட்டிலுள்ள பெண்ணைப் போன்ற பாவிகளிடம் பேசினார்... ஒரு திருமண விருந்தில் திராட்சை இரசம் இல்லாததால் ஏற்படும் அவல நிலையை உணர்ந்தார்' (21).

## இன்றையக் குடும்பங்களின் சவால்கள்:

குடும்பங்களின் தற்போதைய நிலையைத் திருத்தந்தை பிரான்சிஸ் ஆராய்கிறார். 'குடும்ப நலனே உலகின் எதிர்காலத்திற்கும், திருஅவையின் எதிர்காலத்திற்கும் தீர்க்கமானது' (31) என அவர் நம்புவதால், திருஅவையின் மேய்ப்பகப் பதில் மொழியை மேம்படுத்த 'உறுதியான யதார்த்தங்களில்' அவர் கவனம் செலுத்துகிறார். புலம்பெயர்தல், 'தூக்கி எறியும்' கலாச்சாரம், பிறப்பு-எதிர்ப்பு மன நிலை, வீடின்மை, வேலையின்மை, ஆபாசப்படம், சிறார் முறைகேடு எனக் குடும்பங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன (39-56). நமது திருஅவை எப்போதும் 'உண்மையும் எதிர்நோக்கும் கொண்ட வார்த்தைகளை வழங்க வேண்டும்' (57) என பிரான்சிஸ் கேட்டுக் கொள்கிறார்.

## உண்மைச் சூழ்நிலைகளை எதிர்கொள்தல்:

திருஅவை 'உறுதியான யதார்த்தங்களில் கவனம் செலுத்துவது நல்லது, ஏனெனில் 'ஆவியாரின் அழைப்பும் கோரிக்கைகளும் வரலாற்று நிகழ்வுகளில் எதிரொலிக்கிறது' (31). 'குடும்ப வாழ்விலுள்ள எதிர்மறை விளைவுகளால்' (46) புலம்பெயர்தலை நாம் எதிர் கொள்ள வேண்டும். சில குடும்பங்களில் சிறப்புப் பராமரிப்புத் தேவைப்படும் உறுப்பினர் இருக்கலாம். 'சிறப்புப் பராமரிப்புத் தேவைப்படும் பிரச்சனைகளை அன்புடன் ஏற்றுக் கொள்ளும் குடும்பங்கள் பெரிதும் போற்றப்பட வேண்டியவை' (47). 'கொடிய வறுமையிலும், நெருக்கடியிலும் வாழும் குடும்பங்களுக்கு' திருஅவை உதவ முயல்கிறது (49) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்.

## குடும்பப் பணிக்குழுவின் அணுகுமுறைகள்:

குடும்ப வாழ்வின் பல சமகாலச் சவால்களை மதிப்பாய்வு செய்த பின்னர், திருமணம், குடும்ப வாழ்வு தொடர்பான திருஅவையின் அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்ய திருத்தந்தை பிரான்சிஸ் பரிந்துரைக்கிறார். அவரைப் பொறுத்தவரை, 'கோட்பாடு, வாழ்வியல் மற்றும் தார்மீக சிக்கல்களை' மட்டும் வலியுறுத்துவது போதாது; திருஅவை 'அருளுக்கானத் திறந்தத் தன்மையை' ஊக்குவித்து, 'தற்போதைய திருமணத்தை தனிப்பட்ட வளர்ச்சிக்கும் நிறைவுக்கும் ஒரு முன்னேற்றப் பாதையாக உருவாக்க வேண்டும்... மனசாட்சிகளை மாற்ற அல்ல, உருவாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்' (37).

## குடும்பம்: வாழ்வின் சரணாலயம்:

மனித வாழ்வின் புனிதம் குறித்த தனது நம்பிக்கைகளை திருத்தந்தை பிரான்சிஸ் தன் வலுவான வார்த்தைகள் கொண்ட இப்பகுதியில் முன்வைக்கிறார். 'குடும்பமே வாழ்வின் புகலிடமாகவும், உயிரைக் கருத்தரித்துப் பராமரிக்கும் இடமாகவும் இருந்தால், அது அதே வாழ்வால் நிராகரிக்கப்பட்டு அழிக்கப்படும் இடமாக மாறும்போது அது மிகவும் பயங்கரமான முரண்பாடாகும் என்பதை இங்கு வலியுறுத்துவது அவசியம் என நான் உணர்கிறேன். ஒரு மனித உயிரின் மதிப்பு எவ்வளவு பெரியது, தாயின் வயிற்றில் வளரும் ஒரு அப்பாவிக் குழந்தையின் வாழ்வுக்கான உரிமையை எவரும் பறிக்க முடியாது, ஒருவரின் சொந்த உடலின் மீதுள்ள எந்த உரிமையும் அந்த உயிரைத் துண்டிக்கும் முடிவை நியாயப்படுத்த முடியாது. அது மற்ற மனிதனின் 'சொத்தாக' ஒருபோதும் கருத முடியாது. மனித வாழ்வின் அனைத்து நிலைகளையும், அதன் இறுதி நிலை உட்பட, குடும்பம் பாதுகாக்கிறது' (83).

## முடிவுரை:

'அன்பின் மகிழ்ச்சி' என்ற ஆவணத்தின் சில குறிப்பிட்ட நுண்ணறிவுகளை மட்டுமே எடுத்துக் காட்டியத் தொகுப்புரை உங்களது சிந்தனைக்கும், செறிவூட்டலுக்கும், செபத்திற்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மூல உரையின் சிந்தனைகள் நிச்சயமாக அற்புதப் பலனைத் தரும்!

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ ஆசியக் குடும்பங்கள் பொதுவாக உணர்வுப்பூர்வமாக பாசத்தை வெளிப்படுத்துவதில்லை. உண்மையான அன்பை வேறு எவ்வாறு காட்டலாம்?

✦ உங்கள் குடும்பத்தில் உண்மையான அன்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்திய நிகழ்வுகள் யாவை? போராடும் குடும்பங்களுக்கு நாம் எவ்வாறு குறிப்பிட்ட வழிகளில் சேவை செய்யலாம்?

## செபத் தூண்டல்:

**ஆண்டவரே, உண்மையான 'அன்பின் மகிழ்ச்சியைப்' பரப்ப நாங்கள் உறுதியளிக்கிறோம்..**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை.**
**யோவான் 15 : 12**

# Gaudete et Exsultate

# மகிழ்வில் அக்களித்தல் என்றென்றும்

> புனிதம் என்றால் என்ன என்பது பற்றி பல்வேறு விளக்கங்களும், வேறுபாடுகளுடன் எத்தனையோ கோட்பாடுகளும் இருக்கலாம். அத்தகைய சிந்தனைகள் பயனுள்ளதாக இருந்தாலும், இயேசுவின் வார்த்தைகளுக்குத் திரும்புவதையும், அவரது உண்மைகள் கற்பிக்கும் விதத்தைக் காண்பதையும் விட வேறு எதுவும் அறிவூட்டுவதாக இருக்க முடியாது. புனிதமாக இருப்பதன் பொருள் என்ன என்பதை இயேசு நமக்கு மலைப்பொழிவில் மிக எளிமையாக விளக்கியுள்ளார். மலைப்பொழிவு ஒரு கிறிஸ்தவரின் அடையாளம். 'ஒரு நல்ல கிறிஸ்தவராக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?' என்று யாராவது கேட்டால், பதில் தெளிவாக இருக்கும். மலைப்பிரசங்கத்தில் இயேசு சொன்னதை நாம் ஒவ்வொருவரும் அவரவர் வழியில் செய்ய வேண்டும்.
>
> GAUDETE ET EXSULTATE 63

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, நீர் தூயவராய் இருப்பது போல நாங்களும் தூயவராய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்று, இந்த அழைப்பை வாழ்வாக்குவது முன்பை விட மிகக் கடினமானது. மகிழ்ந்து அக்களித்தல் என்ற இந்த ஆவணத்தை நாங்கள் படிக்கும் போது, நாம் எவ்வாறு புனிதத்திற்காக சிறப்பாகப் பாடுபடலாம் என்பதையும், அவ்வாறு செய்வதால் பிறர் உம்மை அறிந்து கொள்ளவும், உம்மை நேசிக்கவும், உமக்குப் பணியாற்றவும் எங்களால் உதவ முடியும் என்பதைக் கற்றுக் கொள்வோமாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

'மகிழ்ந்து அக்களித்தல்' என்ற ஆவணம், 'நற்செய்தியின் மகிழ்ச்சி' (2013), 'அன்பின் மகிழ்ச்சி' (2016) ஆகியவற்றைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிடும் மூன்றாவது திருத்தூது அறிவுரையாகும். நம் வாழ்வின் புனிதத்திற்கான இந்த அழைப்பு, இரண்டாம் வத்திக்கானின் 'பிற இனத்தாரின் ஒளி' (Lumen Gentium) என்ற ஆவணத்தின் அதிகாரம் ஐந்தில் காணப்படும் புனிதத்திற்கான உலகளாவிய அழைப்பைத் தெளிவாக எதிரொலிக்கிறது. இது, 2013ல் அவர் திருத்தந்தையாக பதவியேற்றதன் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புனித யோசப்பு விழாவில் 19 மார்ச் 2018 அன்று வெளியிடப்பட்டது.

### முன்னுரை:

மகிழ்ந்து அக்களித்தல் என்பது மிகவும் நடைமுறைக்குரியது; இது இன்றையப் புனிதத் தன்மைக்கும் ஆன்மீகத்திற்கும் உரிய முழு தொகுப்பல்ல. இதன் தலைப்பு விவிலியத்திலிருந்து வெளிப்படுகிறது, குறிப்பாக மத்தேயு 5:12ல், இயேசு தம் சீடர்களை நோக்கி வாழ்வின் சோதனைகளுக்கு மத்தியிலும் 'மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்' என்று அறிவுறுத்துகிறார். 'புனிதத்திற்கான அழைப்பை நம் சொந்த நேரத்திற்கு நடைமுறைப் படுத்த மீண்டும் முன்மொழிவதே எனது பணிவானக் குறிக்கோள்' என பிரான்சிஸ் குறிப்பிடுகிறார் (2). 'நாம் ஒரு சாதுவான, சாதாரணமானவர்களாக இருந்து திருப்தி அடையாமல், புனிதர்களாக மாற வேண்டும்' என்று இறைவன் விரும்புகிறார் (1).

### புனிதத்தன்மைக்கான அழைப்பு:

மகிழ்ந்து புனிதத்தின் பல வடிவங்கள் உள்ளன, மேலும் நமது திருப்பயணத்தில் 'பெரும் புனிதர்களும், மறைசாட்சிகளும், இறைசாட்சிகளும் நமது பயணத்தில் நமக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்' (4). 'நாம் அனைவரும் சாட்சிகளாக இருக்க அழைக்கப் பட்டுள்ளோம், ஆனால் சாட்சியமளிக்க உண்மையான வழிகள் பல உள்ளன' (11). இதை 'நடுத்தர வர்க்கப் புனிதம்' (7) என்று பிரான்சிஸ் பாராட்டுகிறார்; பெற்றோர், தொழிலாளர்கள், நோயாளிகள், முதியவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். புனிதம் பெரும்பாலும் 'நம் அயலாரிடம்' காணப்படுகிறது (7). 'ஒவ்வொருவரும் அவரவர் வழியில்' (11) என்பதே எளிய விதிமுறை. 'ஏனெனில், இறைவனின் வாழ்வு சிலருக்கு ஒரு விதத்திலும், பிறருக்கு வேறொரு விதத்திலும் எண்பிக்கப்படுகிறது' (11).

'புனிதத்திற்கான கடவுளின் இவ்வழைப்பு சிறிய சைகைகள் வழியாகவே வளரும்' (16). நாம் 'ஏற்கனவே செய்துகொண்டிருப்பதைச் செய்ய இன்னும் நேரிய வழியை நாம் கண்டறிய வேண்டும்' (17). 'புனிதத்தின் பாதையாக பார்க்காமல், ஒரு கிறிஸ்தவர் பூமியில் தனது மறைப்பணி பற்றி நினைக்க முடியாது' (19). 'நீங்கள் உங்கள் முழு வாழ்வையும் ஒரு மறைப்பணியாகக் காண வேண்டும்' (23). 'மறைப்பணி வாழ்விற்கல்ல; நம் வாழ்வே ஒரு மறைப்பணி' (27). 'வாழ்வின் ஒரே பெரும் சோகம் ஒரு புனிதராக மாறாமல் இருப்பதே' (34) என்ற லியோன் ப்லோயின் வார்த்தைகளை பிரான்சிஸ் மேற்கோள் காட்டுகிறார்.

### புனிதத்தன்மையின் இரு நுட்பமான எதிரிகள்:

'நம்மை வழிதவறச் செய்யும்' (35) புனிதத்தின் இரு தவறான வடிவங்களை திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்: ஒன்று, ஞானவாதம் (நமது 'சிறப்பு அறிவால்' மீட்பைப் பெற முடியும் என்ற நம்பிக்கை) மற்றது, மனித நல்லியல்பு (மனிதன் தன் சொந்த மனித முயற்சிகளால் மீட்பைப் பெற முடியும் என்ற நம்பிக்கை). 'உண்மையானக் கிறிஸ்தவ ஞானத்தை நமது அயலாரின் இரக்கத்திலிருந்து பிரிக்க முடியாது' (46) என அவர் புனித

போனவென்தூரை மேற்கோள் காட்டுகிறார். 'அடிப்படையில், நமது வாழ்வு ஒரு கொடை' (55) என்பதை நாம் தொடர்ந்து நினைவுவில் கொள்ள வேண்டும்.

**இயேசுவைப் பின்பற்றுதல்:**
மூன்றாவது அதிகாரம் இயேசுவின் மலைப்பொழிவையும் இறுதித் தீர்ப்பையும் (மத்தேயு (25:31-46) மையமாகக் கொண்டுள்ளது. மலைப்பொழிவு ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் (63). ஆம், 'பிறக்காத அப்பாவி சிசுவுக்காக' போராடும் நாம், ஏற்கனவே பிறந்தப் புனித உயிர்களான ஏழை எளியோர், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பலவீனர், முதியோர், மறைமுகக் கருணைக்கொலைக்கு ஆளானோர், மனித கடத்தல், அடிமைத்தனம், நிராகரிக்கப்பட்டோர் ஆகியோரை மறந்து விடுகிறோம்' (101). 'இரக்கமே திருஅவை வாழ்வின் அடித்தளம்' (105).

**புனிதத்தன்மையின் ஐந்து அடையாளங்கள்:**
விடாமுயற்சி, பொறுமை, சாந்தம் முதலில் உள்ளது. இரண்டாவதாக, ஒருவருக்கு மகிழ்ச்சியும் நகைச்சுவை உணர்வும் தேவை. ஏனெனில், 'கெட்ட நகைச்சுவை புனிதமின் மையின் அடையாளம்' (126). மூன்றாவதாக, துணிவும் ஆர்வமும் தேவை. 'புனிதம் என்பது பேச்சுரிமை; நற்செய்தி அறிவிக்க துணிவும் தூண்டுதலும் தேவை' (129). 'தைரியமும் திருத்தூதரகத் துணிவும் மறைப்பணிக்கு இன்றியமையாதவை' (131). 'திருஅவைக்கு ஆர்வத்துடன் மறைபணியாற்றுவோர் வேண்டும்' (138).

புனிதத்திற்கான அடுத்த இரு வெளிப்பாடுகள்: சமூகமும் நிலையான செபமும். 'புனிதத்தின் வளர்ச்சி என்பது மற்றவர்களுடன் இணைந்து செல்லும் ஒரு சமூகப் பயணம்' (141). இது 'சிறிய அன்றாட செயல்களால் ஆனது' (143). 'தனிமையில் கடவுளோடு செலவழித்த நேரங்களும் அவசியம்; இது சலுகை பெற்ற ஒரு சிலருக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும் உண்மை' (149). நற்கருணையின் மையத்தையும் பிரான்சிஸ் இங்கு குறிப்பிடுகிறார் (157).

**ஆன்மீகப் போர், விழிப்புணர்வு மற்றும் விவேகம்:**
'கிறிஸ்தவ வாழ்வென்பது ஒரு நிலையானப் போர். சாத்தானின் சோதனைகளைத் தாங்கிக் கொண்டு நற்செய்தியை அறிவிக்க நமக்கு வலிமையும் துணிவும் தேவை' (158). நமது போரில் நமக்கு உதவ 'வல்லமையுள்ள ஆயுதங்கள்' வழங்கப்பட்டுள்ளன: 'நம்பிக்கை நிறைந்த செபம், இறைவார்த்தை மீதான சிந்தனை, திருப்பலிக் கொண்டாட்டம், நற்கருணை ஆராதனை, ஒப்புரவு அருளடையாளம், இரக்கச் செயல்கள், சமூக வாழ்வு, மறைப்பணி' (162). 'நாம் தீர்க்கமாக மன்றாட வேண்டியக் கொடை' (166) பகுத்தறிவு என்று பிரான்சிஸ் அப்பட்டமாகக் கூறுகிறார். 'நமது மறைப்பணியை நாம் எவ்வளவு சிறப்பாக நிறைவேற்ற முடியும் என்பதை அங்கீகரிப்பதே' பகுத்தறிவு (174). 'கடவுள் நம்மிடமிருந்து எல்லாவற்றையும் கேட்கிறார், ஆனால் அவர் நமக்கு எல்லாவற்றையும் தருகிறார்' (175).

**இறுதி அழைப்பு:**
'புனிதர்களில் புனிதர்' என அன்னை மரியாவை திருத்தந்தை பிரான்சிஸ் அழைக்கிறார் (176). எனவே, நாம் தொடர்ந்து அன்னை மரியாவிடம் திரும்ப வேண்டும், 'ஏனெனில் இயேசுவின் மலைப்பொழிவை அவரைப் போல வேறு எவரும் வாழ்ந்ததில்லை. நாம் அவளுடன் உரையாடுவது நமக்கு ஆறுதலாளிக்கும், நம்மை விடுவிக்கும், புனிதப் படுத்தும். நாம் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டியதெல்லாம், 'மரியே வாழ்க!' என முணுமுணுப்பது தான் (176).

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ அக்களிப்பும் மகிழ்ச்சியும் பற்றி அறிந்த பிறகு, புனிதத்தன்மையைப் பற்றிய உங்கள் புரிதல் மாறிவிட்டதா? எவ்வாறு?

✦ உங்கள் வாழ்வில் ‘அன்றாடப் புனிதத்தன்மையை’ வெளிப்படுத்திய சில நபர்கள் யார்? புனிதத் தன்மையையில் முன்னேற ஏன் ‘அமைதியான நேரம்’ அவசியம்.

## செபத் தூண்டல்:

**இயேசுவே, எங்கள் வாழ்வில் ‘அன்றாடப் புனிதத்தன்மையை’ ஒருங்கிணைக்க எங்களுக்கு உதவியருளும்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில் நான் தூயவன்.**
**1 பேதுரு 1 : 16**

# Christus Vivit இன்றைய இளையோருடன் பயணித்தல்

> நற்செய்தி சிலருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும்... வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும், சமூகத்தின் விளிம்புகளுக்கும், வெகு தொலைவில் உள்ளோருக்கும், அலட்சியமானோருக்கும் கிறிஸ்துவை கொண்டு செல்ல அஞ்சாதீர்கள். இறைவன் அனைவரையும் தேடுகிறார்; அவருடைய இரக்கத்தையும் அன்பின் அரவணைப்பையும் அனைவரும் உணர வேண்டும் என அவர் விரும்புகிறார். நாம் எங்கிருந்தாலும் யாரோடிருந்தாலும், நமது சுற்றுப்புறங்களில், பள்ளியில், விளையாட்டில், சமூக வாழ்வில், தன்னார்வப் பணியில், பணியிடத்தில், நாம் ஒரு அச்சமற்ற மறைப்பணியாளராக இருக்க அவர் நம்மை அழைக்கிறார். நாம் எங்கிருந்தாலும், நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பகிர நமக்கு எப்போதும் ஒரு வாய்ப்பு உள்ளது. அப்படித்தான் ஆண்டவர் எல்லாரையும் சந்திக்கச் செல்கிறார்.
>
> CHRISTUS VIVIT 177

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, சிங்கப்பூரில் உள்ள இளையோரின் கொடைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். திருஅவையின் நிகழ்காலமும் எதிர்காலமும் அவர்களே. அவர்களின் நம்பிக்கை தொடர்ந்து துடிப்பாகவும் வலுவாகவும் வளர்ந்து, எங்கள் அனைவரையும் ஊக்குவிப்பதாக. கிறிஸ்து வாழ்கிறார் என்ற இந்த ஆவணத்தை நாங்கள் ஆராயும் போது, எங்கள் இளையோர் எதிர்கொள்ளும் தனித்துவச் சவால்களையும் வாய்ப்புகளையும் புரிந்துகொள்ள எங்கள் மனதையும் இதயத்தையும் திறந்தருளும். அவர்களின் தேவை களையும் விருப்பங்களையும் அறிவதற்கான அனைத்து உணர்திறனையும், அவர்களின் ஆன்மீகப் பயணங்களை ஆதரிக்கவும் வளர்க்கவும் அருளையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

திருத்தந்தை பிரான்சிஸ் 2019ம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழாவைக் குறிக்கும் வகையில் வெளியிட்டத் திருத்தூதராக அறிவுரையான கிறிஸ்து வாழ்கிறார் என்ற ஆவணம், அக்டோபர் 2018 அன்று நடந்த ஆயர் ஒன்றித்தலின் போது, 'இளையோரும் நம்பிக்கையும் மறைப்பணிசார் பகுத்தறிவும்' என்றக் கருப்பொருளில் மிகவும் கவனம் செலுத்தியதன் பலனாகும்.

### கட்டமைப்பு:

ஒன்பது அதிகாரங்கள் கொண்ட இந்த அழைப்பு ஆவணம் தோராயமாக, 'கவனி, மதிப்பிடு, செயல்படு' அல்லது ஆசிய ஆயர்களின் கட்டமைப்பில், 'உரையாடல், பகுத்தாய்தல், செயல்பாடுகள்' என்ற மேய்ப்பு முறைக்கு ஒத்திருக்கிறது. சுருக்கமாக, முதல் மூன்று அதிகாரங்கள் 'கவனித்தலையும்' (மறைநூல், இறையியல், சமூகவியல்); அடுத்த மூன்று அதிகாரங்கள் 'மதிப்பிடுதலையும்' (ஆன்மீகம், மேம்பாடு, தலைமுறை); இறுதி மூன்று அதிகாரங்கள் 'செயல்படுதலையும்' (மேய்ப்புப்பணி, மறைப்பணி, ஒன்றித்தப் பயணம்) மீது கவனம் செலுத்துகின்றன. ஒருங்கிணைத்துக் கூறினால், கிறிஸ்து வாழ்கிறார் என்ற ஆவணம் இளையோருக்கும் மேய்ப்புப் பணிக்கும் ஒரு சிறந்த சாசனம்.

### கிறிஸ்துவயியலின் முக்கியத்துவம்:

இந்த நீண்ட ஆவணத்தின் விரிவான மதிப்பாய்விலிருந்து பல வளமானக் கருப்பொருள்கள் வெளிப்படுகின்றன. கிறிஸ்து மீது ஒரு தெளிவான முக்கியத்துவம் உள்ளது; 'கிறிஸ்து வாழ்கிறார்! அவரே நம் எதிர்நோக்கு, அற்புதமான விதத்தில் இளையோரை நம் உலகினுள் கொண்டு வருகிறார்' என பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். எனவே, ஒவ்வொரு இளம் கிறிஸ்தவனிடமும் நான் சொல்ல விரும்புவது: 'கிறிஸ்து வாழ்கிறார், நீங்களும் உயிர் வாழ வேண்டும் என அவர் விரும்புகிறார்' (1).

### தனிப்பட்ட உறவு:

'கிறிஸ்து உங்களில் இருக்கிறார்; உங்களோடு இருக்கிறார், உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார். நீங்கள் வெகுதொலைவில் அலைந்தாலும், உயிர்த்தெழுந்த அவர் எப்போதும் அங்கு இருக்கிறார். அவர் உங்களை அழைக்கிறார்; நீங்கள் அவரிடம் வந்து, மீண்டும் முதலிலிருந்து தொடங்க அவர் காத்திருக்கிறார். துக்கம், மனக்கசப்பு, பயம், சந்தேகம், தோல்வி ஆகியவற்றால் நீங்கள் வயதாகி விட்டதாக உணரும் போது, உங்கள் வலிமையையும் எதிர்நோக்கையும் மீட்டெடுக்க அவர் எப்போதும் இருப்பார்' (2). திருஅவை 'தன்னுள் அதிகமாகப் பிடிபட்டுக் கொள்ளாமல், எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டும்' (39). 'எல்லா இளையோரும் (உண்மையில் எல்லோரும்) இயேசுவில் தங்களைக் காண முடியும்' (31).

### திருஅவை: ஒரு திறந்த சமூகம்:

இந்த ஆவணத்தில் திருஅவையின் எந்த தொலைநோக்கு வெளிப்படுகிறது? இளையோருக்கும் அருள்பணியாளர்கள் பொதுநிலையினர் உட்பட்ட முழு இறை மக்களுக்கும் இடையிலான உறவை திருத்தந்தை பிரான்சிஸ் ஆராய்கிறார். 'இளையோரின் திருஅவை' என்றோ, 'இளையோருக்கான இளையோர் நடத்தும் திருஅவை' என்றோ தனியாக எதுவுமில்லை. திரு அவை என்பது ஒரே சமூகம், இளையோர் இந்த ஒரே உடலில் வாழும் நுண்ணறிவு மிக்க உறுப்பினர்கள்.

## ஒன்றித்துப் பயணிக்கும் திருஅவை:

திருஅவையில் ஒன்றித்தப் பயணத்தின் முக்கியத்துவத்தை திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். திருஅவையிலுள்ள அனைவரும் (இளையோர், திருமணமானவர், முதியோர், அருள்பணியாளர்கள், பொதுநிலையினர்) சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் ஒத்துழைக்க வேண்டும். பிரான்சிஸ் சில குறிப்பிட்டப் பிரச்சனைகளையும் முன்வைக்கிறார். உதாரணமாக, புலம்பெயர்ந்தோரை ஆதரிக்குமாறு முழு திருஅவையையும் அழைத்து, அடிக்கடிப் பிளவுபடும் இந்தப் பிரச்சினைக்கு சமச்சீர் அணுகுமுறையைப் பின்பற்ற அவர் அறிவுறுத்துகிறார். கிறிஸ்துவின் திருஅவையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கிய வழியான கிறிஸ்துவுடனான அவர்களின் சொந்த அனுபவத்தின் அழகை ஊடகங்கள் வழியாகப் பகிர்ந்து கொள்ள இளையோரை அவர் ஊக்குவிக்கிறார்..

## நற்செய்தியின் நுண்ணறிவு:

'மிகுந்த அன்புடன்' (3) எழுதப்பட்ட ஆவணத்தில் பிரான்சிஸ் மறைநூலை ஆராய்கிறார். மத்தேயு நற்செய்தியில் (19:20-22), நாம் ஒரு இளைஞனைக் காண்கிறோம். அவர் இயேசுவை அணுகி, 'இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?' என்று கேட்கிறார்; 'இதில், புதிய எல்லைகளையும் பெரும் சவால்களையும் தேடும் ஆற்றல் மிக்க இளமையின் திறந்த தன்மையை அவர் வெளிப்படுத்துகிறார். ஆயினும், அவருடைய ஆற்றல் உண்மையில் இளமையாக இல்லை. ஏனென்றால் ஏற்கனவே அவர் செல்வத்தோடும், வசதிகளோடும் தன்னை இணைத்துள்ளார். 'இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?' என்று அவர் இயேசுவிடம் கேட்ட போது, இயேசு அவரிடம் தாராள மனப்பான்மையோடு ஏழைகளுக்குக் கொடும் என்ற போது, அவர் தன்னிடம் உள்ள அனைத்திலுமிருந்து விடுபட முடியாது என்பதை உணர்ந்தார்... அவர் தனது இளமையை விட்டுவிட்டார்' (18) என அவர் எழுதுகிறார்.

மேலும் மத்தேயு நற்செய்தி (25:1-13), 'மற்றவர்கள் கவனமின்றி உறங்கிக் கொண்டிருந்த போது தயாராகக் காத்திருந்த முன்மதி உடைய இளம் பெண்கள்' குழுவைக் குறிப்பிடுகிறது. 'உண்மையில், நாம் நமது இளமையில், கவனமின்றி, வாழ்க்கை பற்றிய அக்கறையின்றி, அரைத் தூக்கத்தில், அர்த்தமுள்ள உறவுகளை வளர்க்காமலோ, வாழ்வின் ஆழங்களை அனுபவிக்காமலோ வாழ்ந்திருக்கலாம். இந்த வழியில், நாம் ஒரு அற்பமான ஆதாரமற்ற எதிர்காலத்தைத் தான் காண முடியும். அல்லது அழகானப் பெரிய விஷயங்களுக்கு ஆசைப்பட்டு நம் இளமையைக் கழித்து, செல்வம் நிறைந்த எதிர்கால வாழ்வை மட்டுமே அனுபவிக்கலாம்' (19) எனத் திருத்தந்தை எழுதுகிறார்.

## இறுதிச் சிந்தனைகள்:

நெருக்கம், வெளிப்படைத்தன்மை, எளிமை, மென்மை, அரவணைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் தனித்துவமான பாணியில், திருத்தந்தை பிரான்சிஸ் இந்த ஆவணத்தில் உள்ள தனது தனிப்பட்ட பதிலை வெளிப்படுத்துகிறார். இன்றைய உலகம் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி பேச அஞ்சாத, பயப்படாத, பணியாற்றும் திருஅவையாக மாற திருஅவையிலுள்ள அனைவரையும் மேய்ப்புத் துணிவுடன் திருத்தந்தை பிரான்சிஸ் அழைக்கிறார். இது ஒரு தாழ்மையான சமூகத்தை, இளையோரின் நுண்ணறிவுக்குச் செவிகொடுக்கும் சமூகத்தை வளர்க்க உதவும்.

'கிறிஸ்துவை உற்சாகத்துடனும், சாந்தத்துடனும் பின்பற்ற முயலும் இளம் திருஅவைக்கு மிக உன்னத முன்மாதிரியான' (43) அன்னை மரியாவிடம் திரும்புமாறு பிரான்சிஸ் அனைவரையும் வேண்டுகிறார். நாம் தனிப்பட்ட முறையில் 'ஒவ்வொரு நாளும் உங்கள்

சிறந்த நண்பரை (இயேசுவாகிய நண்பரை) சந்தித்தால்' மட்டுமே இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள முடியும் (150). 'திறந்த மனத்துள்ளே மறைப்பணியாற்றும் சீடர்களாக' இருக்க முயற்சி செய்யத் திருத்தந்தை பிரான்சிஸ் தனது இதயத்திலிருந்து நம் இதயங்களுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கிறார்!

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ என் கிறிஸ்தவ சமூகத்தில் உள்ள இளையோருடன் பயணிக்க திருத்தந்தை பிரான்சிஸ் என்னை எவ்வாறு அழைக்கிறார்?

✦ கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் இன்றைய இளையோர் எதிர்கொள்ளும் சில முக்கியத் தடைகள் யாவை? இந்த சவால்களை இளையோர் சமாளிக்க நான் எவ்வாறு உதவலாம்?

## செபத் தூண்டல்:

**இயேசுவே, இன்றைய இளையோருக்கு மறைப்பணியாற்ற எங்களுக்கு உதவியருளும்...**




## நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு;
உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே.
நீதிமொழிகள் 3 : 5

# Querida Amazonia

# அமசோனிய திருஅவையைக் கண்டறிதல்

**கிறிஸ்து முழு மனிதனை மீட்டு, பிறருடன் உறவில் நுழையும் திறனை நம் அனைவரிலும் புதுப்பிக்க விரும்புகிறார். நற்செய்தி, கிறிஸ்துவின் இதயத்தில் தெய்வீகத் தொண்டுகளை முன்மொழிந்து, நீதியின் நாட்டத்தையும், ஒரே நேரத்தில் சகோதரத்துவத்தையும் ஒன்றிப்பையும் உருவாக்கும் பாடலாகும். இது சந்திப்புக் கலாச்சாரத்திற்கு ஒரு தூண்டுதலாகும். அசல் மக்களின் வாழ்க்கை முறையின் ஞானம், அதன் அனைத்து வரம்புகளுக்கும், இந்த ஆசையை ஆழப்படுத்த நம்மை ஊக்குவிக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு ஈக்வெடார் ஆயர்கள், 'மனிதர்களுக்கிடையேயான எல்லா வகையானப் பாகுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கும் திறன் கொண்ட, பல்வேறு கலாச்சார சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கான அங்கீகாரமும், மதிப்பின் கட்டமைப்பிற்குள் சகோதர உறவுகளுக்கு சலுகை அளிக்கும் ஒரு புதிய சமூக கலாச்சார அமைப்புக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.'**

QUERIDA AMAZONIA 22

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, பல்லின வேறுபாடு என்னும் கொடைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உலகில் நல்லதொரு அழகைக் கொண்டு வரும் பல்வேறு கலாச்சாரங்கள், பாரம்பரியங்கள், மொழிகளின் கொடைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். வேறுபாடுகள் நிறைந்த இந்த சமூகத்தை தொடர்ந்து நிலைநிறுத்த 'அன்புள்ள அமசோன்' என்ற இந்த ஆவணம் கற்பித்து எங்களை ஊக்கப்படுத்துவதாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

அமசோன் வட்டார 2019ம் ஆண்டு ஆயர்கள் ஒன்றித்தலைத் தொடர்ந்து, 2 பிப்ரவரி 2020 அன்று 'அன்புள்ள அமசோன்' என்னும் தனது ஐந்தாவது திருத்தூது அறிவுரை வழியாகத் தனது சிந்தனைகளை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார். முதலில் ஸ்பானிய மொழியில் எழுதப்பட்ட இந்த ஆவணம் பரவலாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சற்று நீளமான 'அன்புள்ள அமசோன்' (16,000 வார்த்தைகள்) நான்கு அதிகாரங்களும் 111 பிரிவுகளும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் அமசோன் பகுதி பற்றி திருத்தந்தையைத் தூண்டும் 'நான்கு பெரும் கனவுகள்' (சமூகம், கலாச்சாரம், சூழலியல், திருஅவை) ஒன்றில் கவனம் செலுத்துகிறது. இரண்டாம் வத்திக்கான் சகாப்தத்தில் உருவான ஆயர்கள் ஒன்றித்தல்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவம் பெற்றபின், ஒரு தனித்துவ சூழலியல் வட்டாரத்தை மையமாகக் கொண்ட முதல் ஆவணம் இது. அமசோன் வட்டாரத்தில் சுமார் 34 மில்லியன் மக்கள் உள்ளனர். ஒன்பது நாடுகளை உள்ளடக்கிய இதில் ஏறக்குறைய 400 இனக்குழுக்களைச் சார்ந்த மூன்று மில்லியன் பேர் பழங்குடியினர்.

### நான்கு கனவுகள்:

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே இந்த ஆவணத்தின் சுருக்கத்தை வழங்குகிறார்: அவர் தனது நான்கு கனவுகளை அறிமுகத்தின் ஏழாவது பகுதியில் கூறியுள்ளார்.

*சமூகம்*

'ஏழைகள், அசலான மக்கள் மற்றும் நமது சகோதர சகோதரிகளின் உரிமைகளுக்காகப் போராடும் ஒரு அமசான் வட்டாரத்தை என் கனவில் காண்கிறேன், அங்கு அவர்களின் குரல்கள் கேட்கப்பட்டும்; அவர்களின் கண்ணியம் மேம்படும்'.

*கலாச்சாரம்*

'அமசோன் வட்டாரத்தின் தனித்துவமான கலாச்சார செல்வங்களை பாதுகாக்க முடியும் என்பதை என் கனவில் காண்கிறேன், அங்கு நமது மனிதகுலத்தின் அழகு பல்வேறு வழிகளில் பிரகாசிக்கிறது'.

*சூழலியல்*

'அமசோன் வட்டாரத்தின் இயற்கை அழகையும், அதன் ஆறுகள், காடுகளில் நிறைந்திருக்கும் மிதமிஞ்சிய வாழ்வையும் பொறாமையுடன் பாதுகாக்க முடியும் என்றும் என் கனவில் காண்கிறேன்.'

*திருஅவை*

'தாராள அர்ப்பணிப்பும், அமசோனிய அம்சங்களுடன் திருஅவைக்கு புதிய முகங்களைக் கொடுக்கும் திறன் கொண்டக் கிறிஸ்தவ சமூகங்கள் அமசோன் வட்டாரத்தில் அவதரிப்பதை என் கனவில் காண்கிறேன்'. தனித்துவமான இந்தக் கனவுகள் பூர்வீகக் கவிதைகளைப் பயன்படுத்தி, அதன் கலை நயமும் இலக்கிய நயமும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன நுழைவோம்' (15).

### சமூக நுண்ணறிவு:

திருத்தந்தை பிரான்சிஸ், அமசோன் மீது மட்டுமல்ல, அனைத்துலகின் மீதும் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பற்றிய ஆழ்ந்த பொறுப்பும் அக்கறையும் கொண்டுள்ளார். 'நம் பொதுத் தாயகத்தைப் பாதுகாப்பது கடவுள் நம் அனைவருக்கும் ஒப்படைத்திருக்கும் பணி' (19). 'ஒரு நியாயமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளுக்கு சகோதரத்துவத் திறனும், மனிதக் கூட்டு உணர்வும் தேவை' (20).

உலகம் முழுவதும் சமூக உரையாடல் தேவை. 'நாம் உரையாட விரும்பினால், முதலில் ஏழைகளுடன் இவற்றைச் செய்ய வேண்டும்... அவர்களே நமது முக்கியப் பங்காளிகள், அவர்களிடமிருந்து நாம் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும்... அவர்களின் வார்த்தைகள், நம்பிக்கைகள், அச்சங்கள் மட்டுமே எந்த உரையாடலிலும் மிகவும் அதிகாரபூர்வமான குரல்...' (26) பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். உண்மையில், 'ஒரு இறைவாக்கின் குரல் எழுப்பப்பட வேண்டும், கிறிஸ்தவர்களாகிய நாம் அதை கேட்க அழைக்கப்படுகிறோம்' (27).

**கலாச்சாரக் கனவுகள்:**
'மக்களின், கலாச்சாரங்களின் உரிமைகளை மதிக்க' (40) வலியுறுத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையின் பணியில் ஒரு முழுமையான கலாச்சார அணுகுமுறையின் அவசரத் தேவை இருப்பதாகக் கூறுகிறார். 'அமசோன் வட்டாரத்தின் இளையோரை நான் கேட்டுக்கொள்வது... உங்கள் வேர்களுக்கு பொறுப்பேற்க வேண்டும், ஏனென்றால் வேர்களிலிருந்து வலிமை வருகிறது, அது உங்களை வளரவும், செழிக்கவும், பலன் தரவும் செய்கிறது'(33) என மிகவும் தனிப்பட்ட முறையில் அவர் பேசுகிறார். 'எங்கள் வேர்களிலிருந்து தொடங்கி, பொது உரையாடல்களால் பகிரும் எதிர்நோக்குகளை' (37) அலசி ஆராய்வோம். திருஅவையின் பணி, ஒரு உண்மையான பன்முகத்தன்மையை ஊக்குவிக்க முயல்கிறது, 'கொண்டாட்டத்தின் வெவ்வேறு கலாச்சாரப் பார்வைகளுக்கிடையேயான உரையாடல், ஒன்றோடொன்று தொடர்பு, எதிர்நோக்கின் மறுமலர்ச்சி' (38) ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

**சூழலியல் முன்னோக்குகள்:**
'நமது சகோதர சகோதரிகளையும் சுற்றுச்சூழலையும் கவனிக்க வேண்டியக் கடமை' கிறிஸ்தவர்களாகிய நமக்கு உள்ளது. ஏனெனில் 'இயற்கையின் சூழலியலுடன் ஒரு 'மனித சூழலியல்' என்று அழைக்கக்கூடிய ஒன்று உள்ளது. இது ஒரு 'சமூக சூழலியலைக் கோருகிறது' (41). 'இயற்கையை முறைகேடு செய்வது, நமது முன்னோர்களை, சகோதர சகோதரிகளை, படைப்பை, படைப்பாளரை முறைகேடு செய்வதாகும், நமது எதிர்காலத்தை அடமானம் வைப்பதாகும்' (42).

'சிந்தனையின் இறைவாக்குதனத்தை' நாம் பயன்படுத்த பழங்குடியின மக்கள் நமக்குக் கற்றுத் தர முடியும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கருதுகிறார் (53). 'நாம் ஒன்றை விரும்பலாம்; அனால் பயன்படுத்த முடியாது' (55) என்னும் இயற்கையின் மறைபொருளுடன் நாம் கொள்ள வேண்டும். 'வன்முறைக்கும் சமநல அழிவுக்கும்' வழிவகுக்கும் 'நுகர்வோர் வாழ்வு முறையை' தவிர்க்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (59). 'கடவுள் கொடுத்த அழகியலையும் சிந்தனை உணர்வையும் கட்டி எழுப்புவோம்'! (56)

**திருஅவையின் பங்களிப்புகள்:**
நற்செய்தியை வளர்க்கும் திருஅவையின் பணியை திருத்தந்தை பிரான்சிஸ் மறுபடியும் வலியுறுத்துகிறார். ஏனெனில் 'கலாச்சாரமாக மாறாத நம்பிக்கை என்பது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாத, முழுமையாக பிரதிபலிக்காத, உண்மையாக வாழாத ஒரு நம்பிக்கை' (67). திருஅவை தனது மறைப்பணியில், பழங்குடி மக்களின் பிரபலத்தைப் பயன்படுத்த முற்பட வேண்டும் (77-80). 'பிரபல இறைப்பற்முறை ஒருமுறை நாம் பெற்ற பிறகு, அது எவ்வாறு ஒரு கலாச்சாரத்தில் திகழ்கிறது, தொடர்ந்து கடந்து செல்கிறது என்பதைக் காண நமக்கு உதவுகிறது' (78). இந்த முயற்சி 'பண்படுத்தப்பட்ட ஆன்மீகத்தை' (79) விளைவிக்கும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் நம்புகிறார்.

**கூடுதலான நுண்ணறிவு:**

**'இரு மனித முகங்கள்; மனுவுருவான இறைமகனின் முகம், பெண் என்னும் படைப்பாகிய மரியாவின் திருமுகம்' (101) வழியாக நற்கருணை, பெண்கள், புனிதம், கடவுளின் வெளிப்பாடு பற்றிய பல ஆழமான நுண்ணறிவுகளை 'அன்புள்ள அமசோன்' ஆவணத்தில் நாம் காணலாம். நண்பர்களே, மற்றொரு 'பிரான்சிஸ் புதையலை' கண்டு மகிழுங்கள்!**

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ **புலம்பெயர்ந்தோரை வரவேற்று, இனப்பாகுபாடு இல்லாத சமூகமாக சிங்கப்பூரை மாற்ற எனது அன்றாட வாழ்வில் நான் என்ன செய்ய முடியும்?**

✦ **சிங்கப்பூருக்குப் புலம்பெயர்ந்தோரிடமிருந்து, அவர்களது கலாச்சாரங்கள் ஆன்மீகங்களிலிருந்து நாம் என்ன குறிப்பிட்ட நுண்ணறிவுகளைக் கற்றுக்கொள்ளலாம்? அவர்களின் பங்களிப்புகளைப் பாராட்டுவதிலிருந்து நம்மைக் குருடாக்குவது எது?**

## செபத் தூண்டல்:

**ஆண்டவரே, இன வேறுபாடு கொண்ட மக்களை ஏற்றுக்கொள்ள எங்களுக்கு உதவியருளும்...**



**நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை**

**அந்நியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு.**
**எபிரேயர் 13 : 2**

# Fratelli Tutti

# சகோதரத்துவத்தையும் நட்பையும் வளர்த்தல்

> **நமது காலகட்டத்தில், ஒவ்வொரு மனிதரின் கண்ணியத்தை ஏற்றுக்கொள்வதன் வழியாக நாம் சகோதரத்துவத்திற்கான உலகளாவிய ஆர்வத்தின் மறுபிறப்புக்கு பங்களிக்க முடியும் என்பதே எனது விருப்பம். அனைவருக்கும் இடையே சகோதரத்துவம். இங்கு நமக்கு ஒரு அற்புதமான இரகசியம் உள்ளது, எப்படி கனவு கண்டு, நம் வாழ்வை ஒரு வியப்புக்குரிய சாகசமாக மாற்றுவது என்பதைக் காட்டுகிறது. யாரும் தனிமையில் வாழ்வை எதிர்கொள்ள முடியாது... நம்மை ஆதரித்து உதவும் ஒரு சமூகம் நமக்குத் தேவை, அதில் ஒருவரையொருவர் நாம் முன்னோக்கிப் பார்க்க முடியும். ஒன்றாகக் கனவு காண்பது எவ்வளவு முக்கியம்! நம்மால், மாயைகளைப் பார்க்கும் அபாயம் உள்ளது. மறுபுறம், நம் கனவுகள் ஒன்றாக கட்டமைக்கப்படுகின்றன.**
>
> FRATELLI TUTTI 8

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, எங்கள் உலகம் முன்னெப்போதையும் விட அதிகமாக இணைக்கப்பட்டிருந்தாலும், தனிப்பட்ட நபர்கள் முன்னெப்போதையும் விட அதிகமாகப் பிரிந்திருக்கிறார்கள். நாம் பெருகிய முறையில் தனிநபராகவும், மற்றவர்களின் தேவை களுக்கு குருடாகவும் மாறியுள்ளோம். எங்கள் மனதைத் திறந்து ஒருவரையொருவர் சகோதர சகோதரிகளாகப் பார்க்க எங்களுக்கு உதவியருளும். ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

2020ம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சகோதரத்துவம் (Fratelli Tutti) என்ற தலைப்பிலானத் தனது மூன்றாவது சுற்றறிக்கையை வெளியிட்டார். தனது இரண்டாம் சுற்றறிக்கையைப் போலவே இந்த இத்தாலிய தலைப்பு பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சூழலியலின் பாதுகாவலரான பிரான்சிஸ் அசிசியாரின் எழுத்துக்களில் இருந்து பெறப்பட்டது.

இந்த ஆவணம் மிக நீண்டதாக (43,000) வார்த்தைகள்) இருப்பினும், அதன் தொடர்புடைய அவசரச் செய்தியை மறைத்து விடக்கூடாது! அதன் சில முக்கியக் கருப்பொருள்கள் பின்வருமாறு: சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் புதுப்பிக்கப்பட்ட மனித உறவுகள், அமைதிக்கும் ஒப்புரவுக்குமான அழைப்பு, அரசியலின் புதுப்பித்தல், பூமி, நமது பொதுத் தாயகத்தைப் பாதுகாத்தல், கிறிஸ்துவ இஸ்லாமிய மதங்களுக்கு இடையிலான அதிக நல்லுறவு. மனித ஒன்றிப்பின் பணியில் மதங்கள். இதன் தனிப்பட்ட அதிகாரங்கள் சுற்றறிக்கையின் தொகுப்பாகச் செயல்படும்.

**முதல் அதிகாரம்**, 'மூடப்பட்ட உலகின் மீது கருமேகங்கள்' இன்று மனிதகுலம் எதிர் கொள்ளும் பல சவால்களை சுருக்கமாகக் கூறுகிறது. 'சமூகம் மேலும் உலகமயமாகும் போது, அது நம்மை அண்டை வீட்டாராக ஆக்கினாலும் அதில் சகோரத்துவம் இல்லை' (12) என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். கடவுள், ஏழைகள், பலவீனமானோர், இயற்கை ஆகியவற்றுக்கு அசிசியின் பிரான்சிஸ் செவிசாய்த்தார் என்பதையும் அவர் நினைவு கூர்ந்தார்; பிரான்சிஸ் விதைத்த இந்த விதை நம் இதயத்தில் வளர வேண்டும் (48).

**இரண்டாம் அதிகாரம்**, 'சாலையில் ஒரு அந்நியன்' என்ற தலைப்பிட்ட இது இயேசுவின் நல்ல சமாரியன் உவமையின் அற்புதப் பிரதிபலிப்பு (லூக்கா 10:25-37). மற்றவர்களின் பாதிப்பை அடையாளம் காணும் மனிதர்கள் மட்டுமே உண்மையான சமூகத்தை உருவாக்க முடியும் என்பதை இந்த உவமை நமக்குக் காட்டுகிறது என்று திருத்தந்தை கவனித்துள்ளார் (67). நம் உலகில் பல 'காயமடைந்தோர்' இருப்பதாக பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்; நாம் அவர்களைப் பாதுகாப்பானத் தூரத்தில் வைத்து அனுதாபம் காட்டினால் மட்டும் போதாது, நாம் உண்மையில் அவர்களைத் தொட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார் (76).

**மூன்றாம் அதிகாரம்**, 'திறந்த உலகைக் கற்பனையோடு உருவாக்குதல்' என்பது மனித ஒன்றிப்பின் தொலைநோக்கைக் கோடிட்டுக் காட்டுகிறது. பிரான்சிஸ் நல்ல சமாரியன் உவமைக்குத் திரும்புகிறார்; காயமடைந்தவரைக் கடந்து சென்றவர்கள் தங்கள் கடமைகள், சமூக அந்தஸ்து, நிபுணத்துவ அர்ப்பணிப்பு ஆகியவற்றில் அக்கறை கொண்டிருந்ததை அவர் கவனிக்கிறார். சாலையோரக் காயமடைந்தவர் அவர்களின் தனிப்பட்டக் கடமைக்கு ஒரு ' கவனச்சிதறல்' மட்டுமே (101). அனைத்து மக்களும் மனித விழிப்புணர்வில் வளர வேண்டும்; நமக்கு 'உலகளாவியத் தன்னுணர்வின் பொறி' (117) தேவை.

**நான்காம் அதிகாரம்**, நம் அனைவருக்கும் 'முழு உலகிற்கும் திறந்த இதயம்' தேவை என்று வலியுறுத்துகிறது. பலதரப்பட்ட மக்கள், கலாச்சாரங்கள், மதங்கள், மதிப்புகள் ஆகியவற்றைப் பாராட்டுதல் என்பது இதன் பொருள். அனைத்து தனிநபர்களையும் கொடையாகக் கருதி, செழுமைப் படுத்துதலையும், ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் கொண்டு செல்ல வேண்டும் (133). 'இக்காலத்தில் நாம் அனைவரும்

ஒன்றாக மீட்கப்பட வேண்டும் அல்லது எவருக்கும் மீட்பில்லை என்ற விழிப்புணர்வை நாம் வளர்க்க வேண்டும்' (137) என பிரான்சிஸ் வலியுறுத்துகிறார்.

அடுத்த **மூன்று அதிகாரங்கள்** இன்றைய மனிதகுலத்தின் சில அவசரத் தேவைகளைச் சுருக்கமாகக் கூறுகின்றன: 'ஒரு சிறந்த வகை அரசியல்' (5), 'சமூக உரையாடலும் நட்பும்' (6), 'புதுப்பித்த சந்திப்பின் பாதைகள்' (7). திருத்தந்தை பிரான்சிஸின் பல நுண்ணியக் கருத்துகளை நாம் பாராட்டலாம். உலக அரசியல் பட்டினியைப் போக்க வழி காண வேண்டும் என்று அவர் சாடுகிறார்; தூக்கி எறியப்படும் உணவு ஒரு உண்மையான ஊழலை உருவாக்குகிறது. 'பசி ஒரு குற்றம்; உணவு ஒருவரின் பிரிக்க முடியாத உரிமை' (189).

உண்மையான அரசியலுக்கு மற்றவர்களின் மென்மையான அன்புக்கு இடமளிக்க வேண்டும்; மென்மை என்பது மிகவும் தைரியமானவர்கள் தேர்ந்தெடுக்கும் பாதை (194). 'வாழ்க்கை, அதன் அனைத்து மோதல்களுக்கும் எதிர்கொள்ளலின் கலை' என்று பிரான்சிஸ் நம்புகிறார் (215); எனவே, வேறுபாடுகளையும் பிளவுகளையும் கடந்து 'எதிர்கொள்ளல் கலாச்சாரத்தின்' வளர்ச்சியை நாம் ஊக்குவிக்க முயல்வோம். 'எதிர் கொள்ளல் செயல்முறைகளை உருவாக்க, வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய மக்களை உருவாக்கும் செயல்முறைகள்' (217) முக்கியமானது.

**கூடுதலான நுண்ணறிவு:**
இந்த ஆவணத்தில், உண்மையான மனித எதிர்கொள்ளலை எளிதாக்கி, சமூக ஒன்றிப்பை வளர்க்கப் பல பரிந்துரைகளை ஒருவர் காணலாம். உரையாடல், ஒப்புரவு, பரஸ்பர வளர்ச்சி வழியாக மட்டுமே உண்மையான அமைதியை அடைய முடியும் (229). லத்தீன் அமெரிக்க ஆயர்கள் குறிப்பிட்டது போல்: 'ஏழைகளுக்கான விருப்பம் ஏழைகளுடனான நட்புக்கு நம்மை வழிநடத்த வேண்டும்' (234). ஹிரோஷிமா, நாகசாகி மீது வீசப்பட்ட அணுகுண்டுகள், அடிமை வர்த்தகம் (247-248) போன்ற துயரச் சம்பவங்களை நினைவில் கொண்டு, நமது வரலாற்றை உயிருடன் வைத்திருக்க வேண்டும்.

**எட்டாம் அதிகாரம்**, 'நமது உலகில் சகோதரத்துவச் சேவையில் உள்ள மதங்கள்', பரந்த சமுதாயத்தில் சகோதரத்துவத்தை கட்டியெழுப்பவும், நீதியைப் பாதுகாக்கவும் உலகின் பல்வேறு மதங்கள் செய்யக் கூடிய முக்கியப் பங்களிப்பைச் சித்தரிக்கிறது.

**நடைமுறைப் பயன்பாடுகள்:**
நாம் நமது நம்பிக்கையிலும் சமூக அர்ப்பணிப்பியிலும் வளர முற்படுகையில், முன்னேற்றத்திற் கான உறுதியானப் பாதைகளைத் தேடுகிறோம்; நிச்சயமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எழுத்துக்களிலுள்ள ஆழமான நுண்ணறிவுகளைப் படித்து உள்வாங்குவது நம்மை ஆழமாக வளப்படுத்தும். இந்த ஆவணத்தை, ருசியான, சிறந்த, பரந்த, உன்னத உணவுப் படையலாகக் கருதுங்கள்; அதனை உண்மையாக ருசிக்க, ஒருவர் வாரத்தில் ஒரு அதிகாரத்தைப் படித்து, குறைந்தது பதினைந்து நிமிடங்களாவது சிந்திக்க ஒதுக்கலாம்; அல்லது இந்த ஆவணத்தையும் உங்கள் ஆண்டு தியானமாக சிந்திக்கலாம். உங்கள் விருப்பம் எதுவாக இருந்தாலும், சகோதரத்துவம், சமூக நட்பு பற்றிய திருத்தந்தை பிரான்சிஸின் தொலைநோக்குப் பார்வையையும், கனவுகளையும் உள்வாங்கி செயல்படுத்த உறுதியெடுங்கள். உண்மையாகவே, நாம் 'அனைவரும் சகோதர சகோதரிகள்' என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்!

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ இன்றைய சிங்கப்பூரில் உள்ள 'அந்நியர்' யார்? நான் அவர்களுக்கு எந்த விதத்தில் 'நல்ல சமாரியனாக' இருக்க முடியும்?

✦ மிக வித்தியாசமான குணமும் கலாச்சாரமும் கொண்ட ஒருவரை நீங்கள் சந்தித்தபோது, நீங்கள் நண்பரான சூழ்நிலையை விவரிக்க முடியுமா? மனித, சமூக ஒற்றுமையில் நமது வளர்ச்சியைத் தடுக்கும் சில தடைகள் யாவை?

## செபத் தூண்டல்:

**படைப்பாளரானக் கடவுளே, 'எங்கள் காயப்பட்ட பூமியின் அழு குரலைக் கேட்க' எங்களுக்கு உதவியருளும்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள்; பிறர் உங்களை விட மதிப்புக்கு உரியவர் என எண்ணுங்கள்.**
**உரோமையர் 12 : 10**

# Desiderio Desideravi

# நமது வழிபாட்டு உருவாக்கத்தைத் தொடர்தல்

> **இந்த மடல் வழியாகக் கிறிஸ்தவக் கொண்டாட்டத்தின் உண்மையையும் வல்லமையையும் மீண்டும் கண்டறியவும், பாதுகாக்கவும், அதை வாழ்வாக்கவும் திருஅவையாகிய உங்களை அழைக்கிறேன். கிறிஸ்தவக் கொண்டாட்டத்தின் அழகையும், திருஅவையின் வாழ்வுக்குத் தேவையான விளைவு களையும், அதன் மதிப்பைப் பற்றிய நமது மேலோட்டமான, முன்னறிந்தப் புரிதலால், இன்னும் மோசமாக, அது எந்த சாயலிலிருந்தாலும், கருத்தியல் நோக்கத்தில் சில பணிகளில் பயன்படுத்தப்படுவதன் வழியாகக் கெட்டுப் போக விடக்கூடாது என நான் விரும்புகிறேன். இயேசு இறுதி இராவுணவின் போது செபித்த அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற அருள் பணியாளர் செபம், ஒற்றுமையின் அடையாளமான, தொண்டாற்றலின் பிணைப்பான, அந்த உடைபட்ட அப்பத்தைச் சுற்றி, இரக்கத்தின் அருளடையாளத்தைச் சுற்றி, நம்மிலுள்ள ஒவ்வொரு பிரிவையும் சுட்டிக்காட்டுகிறது.**
>
> DESIDERIO DESIDERAVI 16

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, எங்கள் திருஅவையின் விலைமதிப்பற்றப் புதையலான நற்கருணையில் உள்ள உம் திருமகன் இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் நம்பிக்கையின் உச்சமும் வளமுமான இந்த நற்கருணை, எப்போதும் திருஅவையின் மீட்புப் பணியில் ஆதரவளிப்பதாக. 'மிக மிக ஆவலாய் இருந்தேன்' என்ற ஆவணத்தைப் பற்றி நாங்கள் அறியும் வேளையிலே, நற்கருணையையும் வழிபாடுகளையும் இன்னும் ஆழமாகப் பாராட்டவும் அன்பு செய்து வளரவும் நாங்கள் ஊக்கம் பெறுவோமாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

வழிபாட்டு முறை உருவாக்கம் பற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஒரு விலை மதிப்பற்றக் கொடையாகிய 'மிக மிக ஆவலாய் இருந்தேன்' என்ற இந்த திருத்தூது மடல், வழிபாட்டு முறையின் அழகையும், திருச்சபையின் வாழ்வில் அதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் கண்டறிய நமக்கு அழைப்பு விடுக்கிறது. புனிதர்களான பேதுரு பவுல் திருவிழா அன்று (29 ஜுன் 2022) வழிபாட்டு முறைகள் குறித்த திருத்தந்தையின் இந்த இரண்டாம் ஆவணம், அவரது 2021ம் ஆண்டு 'பாரம்பரியத்தை காப்போர்' ஆவணத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் (1962-1965) முக்கிய சீர்திருத்தங் களை எதிர்த்தக் குழுக்களின் இரண்டாம் வத்திக்கானுக்கு முந்தைய வழிபாட்டு முறை பயன்பாட்டிற்கு வரம்புகளை வைக்க இது முயன்றது.

### விலைமதிப்பற்ற வளம்:

இந்த மடல் ஒரு வல்லமை மிக்க படிப்பினைத் தரும் ஆவணமும் தியானத்திற்கான உறையுமாகும். இது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பல்லாண்டு கால வாழ்வாலும், பாஸ்கா மறைபொருளைக் கொண்டாடியதாலும் பெற்ற ஆழமான வழிபாட்டு, ஆன்மீக நுண்ணறிவுகளை வெளிப்படுத்துகிறது. திருத்தந்தைக்கும், அனைவருக்கும் 'நற்கருணை யில் பங்கேற்பது என்பது கடவுளின் அன்பு உலைக்குள் அமிழ்த்தப்படுவதாகும்' (57).

இந்த மடல், மூன்று முக்கியப் பிரிவுகளைக் கொண்டதாக ஒருவர் காணலாம்: திருஅவையின் வாழ்வில் வழிபாடு (2-26), தீவிரமான முக்கிய வழிபாட்டு முறை உருவாக்கத்தின் அவசியம் (27-47), மற்றும் கொண்டாட்டத்தின் கலை (48-60). ஒரு சுருக்கமான அறிமுக உரையும் முடிவுரையும் உள்ளது. 'திருஅவையின் வாழ்வுக்கு அடிப்படையான வழிபாட்டு முறைகள்' பற்றிய சில சிந்தனைகளை' (1) திருஅவையில் உள்ள அனைவருடனும் பகிர இந்த மடலை எழுதுவதாகத் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். 'மிக மிக ஆவலாய் இருந்தேன்' என்ற தலைப்பு, இயேசு பாடுகள்படுவதற்கு முன், தனது சீடர்களுடன் பாஸ்காவை உண்ண வேண்டும் என்ற தனது விருப்பத்தை லூக்கா 22:15ல் வெளிப்படுத்திய வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்டது.

### வழிபாட்டு அடித்தளங்கள்:

மடலின் முதல் பகுதி, மறைநூல் அடிப்படையையும், வழிபாட்டு முறையின் இறையியலை யும், தற்போதைய சில சிரமங்களையும், அன்றாட வாழ்வில் வழிபாட்டை வாழ்வதற்கானச் சவால்களையும் குறிப்பிடுகிறது. நாம் அனைவரும் ஆண்டவரின் பந்திக்கு 'சிறப்பான அழைப்புபெற்றவர்கள்' எனக்கருத வேண்டும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். திருஅவையின் 'மறைப்பணியாற்றும் விருப்பத்தை' நடைமுறைப்படுத்துவதன் வழியாக, அனைவருக்கும் ஒரே அழைப்பு விடுக்கப்படும் வரை நாம் ஓய்ந்திருத்தலாகாது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் 'எவாஞ்சலை கௌடியம்' என்ற ஆவணத்தில் (27) குறிப்பிடுகிறார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கமும் வழிபாட்டு இயக்கமும், வழிபாட்டு முறை பற்றிய இறையியல் புரிதலின் மறுகண்டுபிடிப்பையும், திருஅவையின் வாழ்வில் அதன் முக்கியத் துவத்தையும் ஊக்குவித்து, அதன் 'முழுமையான, உணர்வுள்ள, துடிப்புமிக்க, பயனுள்ளக் கொண்டாட்டத்தை' ஊக்குவித்ததாக (SC 14) பிரான்சிஸ் நினைவு கூர்ந்தார். நற்கருணை என்பது 'இரக்கத்தின் அருளடையாளம், ஒற்றுமையின் அடையாளம், தொண்டாற்றலின் பிணைப்பு' புனித அகஸ்டின் குறிப்பிடுகிறார்.

### இணக்கமான நுண்ணறிவு:

இரண்டாம் பகுதி, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழிபாட்டு முறை புதுப்பித்தலையும் திருஅவை வாழ்வில் அதன் அடிப்படைப் பங்கையும் அழகாக முன்வைக்கிறது. இங்கு

பிரான்சிஸ், புதுப்பிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளை ஏற்றுக்கொள்தலையும், சங்கத்தின் ஏற்றுக்கொள்தலையும், மிகச் சிறப்பாக இணைக்கிறார். எனவே, திருஅவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு ஆழமான, தொடர்ச்சியான வழிபாட்டு முறை உருவாக்கத்தின் அவசரத் தேவையை ஒருவர் புரிந்து கொள்ளலாம்.

ஒருவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் விரிவான புதுப்பித்தலைப் பாராட்ட, அதன் நான்கு பெரிய அரசியலமைப்புகளை இணக்கமாகப் படிக்க வேண்டும்: *Lumen Gentium* (திருஅவை), *Dei Verbum* (திருவெளிப்பாடு), *Gaudium et Spes* (நவீன உலகில் திரு அவை), *Sacrosanctum Concilium* (திருவழிபாடு). கூடுதலாக, அனைத்துத் திருஅவைச் சங்கம் என்பது ஒன்றித்துப் பயணிக்கும் நமது திருஅவையின் மிக உயர்ந்த வெளிப்பாடு என்பதை நினைவில் கொள்ள வேண்டும் – இரண்டாம் வத்திக்கான் சங்கம் அதன் புதுப்பித்தலையும் மேம்படுத்துதலையும் திருவழிபாட்டு முறையின் சிந்தனையுடன் தாடங்கியது. 1962ல் சங்கம் தொடங்கி அறுபது ஆண்டுகளுக்கு மேலாகியும், அதன் ஆழமான நுண்ணறிவு நமது திருஅவைக்கு அடித்தளமாக உள்ளது.

### வழிபாட்டுக் கொண்டாட்டம்: ஒரு கலை

கொண்டாட்டத்தின் கலை பற்றிய மூன்றாம் பகுதி பல முக்கிய கருப்பொருள்களை வழங்குகிறது. சில எடுத்துக்காட்டுகள்: கொண்டாட்டம் ஒரு ‘கலை’; அதற்கு ‘நிலையானப் பயன்பாடும்,’ சின்னங்களின் ஆழமான பாராட்டும் அவசியம். செபத்தில் கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்க அனைவரும் தூய ஆவியாரின் செயல்பாட்டுக்கும் நுழைய வேண்டும்; அமைதியானத் தருணமும் அவசியம்.

தொடக்ககாலக் கிறிஸ்தவ சமூகம் இறைவனின் கட்டளையைப் பின்பற்றி அப்பம் பிட்கும் போது, அதை மரியாளின் பார்வையில் செய்தார்கள் (திப 1:14) என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். மரியாள் தன் வயிற்றில் மனுவுருவான வார்த்தையைப் பாதுகாத்தது போல, கிறிஸ்துவின் உடலான நற்கருணையைப் பாதுகாக்கும் திருஅவையின் வயிற்றில் உருவானவர்களை அவள் இப்போது பாதுகாக்கிறாள் (58).

### சிறப்பு வலியுறுத்தல்கள்:

இந்த ஆவணத்தின் பல்வேறு கருத்துகளிலிருந்து மற்றொரு முக்கியத் தலைப்பு வெளிப்படுகிறது: இரண்டாம் வத்திக்கானின் பதினாறு ஆவணங்களில் காணப்படும் திரு அவைப் படிப்பினைகள் முழுவதையும் அனைவரும் ஏற்றுக்கொள்தல். ‘தூய ஆவியாரின் வழிகாட்டுதலையும் அருள் பணியாளர்களின் மனசாட்சியையும் பின்பற்றி, சீர்திருத்தத்தின் அவசியத்தை உணர்ந்த சங்கத்தின் தந்தையர், பேதுருவோடும் பேதுரு (திருத்தந்தை) வழியாகவும் ஒப்புதல் பெற்ற அந்த சடங்கு முறையைப்’ பின்வாங்க முடியாது என்று பிரான்சிஸ் உறுதியாகக் கூறுகிறார் (61).

இரண்டாம் வத்திக்கானைப் போன்ற அனைத்துத் திருஅவைச் சங்கம் என்பது ஒன்றித்துப் பயணிக்கும் நமது திருஅவையின் மிக உயர்ந்த வெளிப்பாடு (29) என்றும் திருத்தந்தை குறிப்பிடுகிறார். தெளிவாக, ‘தூய ஆவியார் திருஅவைக்குச் சொல்வதை ஒன்றாகக் கேளுங்கள். நமது ஒன்றிப்பைப் பாதுகாப்போம். திருவழிபாட்டின் அழகைக் கண்டு வியந்து கொண்டே இருப்போம். இவை அனைத்தும் திருஅவையின் தாயாகிய மரியாவின் பார்வையில்’ (65) என தன் இதயத்திலிருந்து பேசும் திருத்தந்தை பிரான்சிஸ் நம்மைக் கேட்கிறார்.

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ உங்களின் தனிப்பட்ட நம்பிக்கைப் பயணத்தில் நற்கருணையின் முக்கியத்துவத்தைப் பற்றிய உங்கள் முன்னோக்கு பல ஆண்டுகளாக எவ்வாறு உருவாகியுள்ளது?

✦ நற்கருணை உங்களைப் புதுப்பித்து மாற்றும் சில வழிகள் யாவை? திருஅவை எவ்வாறு இளையோரை நற்கருணைக்கு சிறப்பாக ஈர்க்க முடியும்?

## செபத் தூண்டல்:

**இயேசுவே, உமது உண்மையான நற்கருணைப் பிரசன்னத்தில் எங்களின் நம்பிக்கையைப் பகிர உதவியருளும்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்.
யோவான் 4 : 24

# Laudate Deum

# அவசரக் காலநிலை நடவடிக்கைக்கு அழைப்பு

> **காலநிலை மாற்றம் குறித்த நமது அக்கறையின் பொருளை அமெரிக்காவின் ஆயர்கள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர், இது வெறும் சுற்றுச்சூழல் அணுகுமுறைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் 'ஒருவருக்கொருவர் மீதுள்ள நமது அக்கறையும் பூமியின் மீதுள்ள நமது அக்கறையும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. நமது சமுதாயமும் உலகளாவிய சமூகமும் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று காலநிலை மாற்றம். காலநிலை மாற்றத்தின் விளைவுகள் வீட்டிலோ உலகெங்கிலோ மிகவும் பாதிக்கப்பட்ட மக்களால் மட்டுமே தாங்கப்படுகிறது. 'இயற்கையின் மீதான தாக்குதல்கள் மக்களின் வாழ்வில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன' என்று அமசோனுக்கான ஆயர் ஒன்றித்தலில் கூடியிருந்த அனைவருமே ஒரு சில வார்த்தைகளில் ஒருமித்துக் கூறினார்கள். மேலும் அவர்கள், இது ஒரு இரண்டாம் நிலை அல்லது கருத்தியல் கேள்வி அல்ல, ஆனால் நம் அனைவருக்கும் தீங்கு விளைவிக்கும் நாடகம் என்று வெளிப்படையாகக் கூறினார்கள். காலநிலை மாற்றம் 'கட்டமைப்பு பாவத்தின் ஒரு சோகமானக் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு' என்பதை வெளிப்படுத்துகிறது என்று ஆப்பிரிக்க ஆயர்கள் கூறினார்.**
>
> LAUDATE DEUM 3

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, பூமித் தாய் என்னும் கொடைக்காக நாங்கள் உம்மைப் போற்று கிறோம். எங்கள் உலகைப் பாதுகாத்துக் குணப்படுத்தும் பணி சிறிதல்ல. 'கடவுளைப் புகழுங்கள்' என்ற ஆவணத்தைப் பற்றி நாங்கள் அறியும் போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான அழைப்புக்கு பதிலளிக்கும் அவசர நிலையை எங்கள் இதயங்களில் தூண்டிவிடுவதாக. ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

அக்டோபர் 2023ம் ஆண்டு 4ம் நாள், புனித பிரான்சிஸ் அசிசி திருவிழா அன்று, 'காலநிலை நெருக்கடியில் நல்லெண்ணமுள்ள அனைத்து மக்களுக்கும்' ஒரு உணர்ச்சி மிக்க அழைப்பை, *Laudate Deum (LD)* 'கடவுளைப் புகழுங்கள்' என்ற திருத்தூது அறிவுரை வழியாக, மனிதகுலம் அனுபவித்து வரும் சுற்றுச்சூழல், சூழலியல் நெருக்கடிகளைத் தீவிரமாக நிவர்த்தி செய்ய நமது திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார்.

### தற்போதைய சூழல்:

திருத்தந்தை பிரான்சிஸ் தனது *Laudato Sí'* என்ற ஆவணத்தை வெளியிட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின் வரும் இந்த ஆவணத்தில் 'நம் பொதுத் தாயகத்தைப் பராமரித்தல்' (2015/2023) என்ற துணை தலைப்பும் அடங்கும். 'நம் பொதுத் தாயகத்தைப் பராமரித்தல்' மற்றும் 'துன்புறும் நமது கோள்' பற்றிய தனது இதயப்பூர்வமானக் கவலைகளைப் பகிர்ந்து, 'இதற்கான நமது பதில்கள் போதுமானதாக இல்லை' (2) என அவர் ஆழ்ந்த அவசர நிலையை ஆதங்கத்துடன் உணர்கிறார். இவ்வாறு, மனசாட்சியின் தீவிர ஆய்வைத் தூண்டி, தீர்க்கமான நடவடிக்கைக்கு இணக்கமான அர்ப்பணிப்பு செய்ய இந்த ஆவணத்தின் வழியாக பிரான்சிஸ் முயல்கிறார்!

### நிலைமையின் விபரம்:

'இந்தப் பிரச்சினையை மறுக்க, மறைக்க, பூசி–மொழுக, சார்பியல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் இருந்த போதிலும், காலநிலை மாற்றத்தின் அறிகுறிகள் மென்மேலும் தெளிவாகத் தெரிகிறது' (5) என்று பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். பிரான்சிஸ் வழங்கும் யதார்த்தப் பகுப்பாய்வு: திடமான அறிவியலாலும் துல்லியப் புள்ளிவிபர அடிப்படையிலும் மதிப்பீடு செய்யப்படுகிறது. காலநிலை மாற்றத்தின் 'மனித தோற்றம்' பற்றி இனி சந்தேகிக்க வழியில்லை. ஏனெனில், காலநிலை நெருக்கடியின் சில விளைவுகள் ஏற்கனவே மாற்ற முடியாதவை ஆயிற்று.

### முன்னுதாரணமான விமர்சனம்:

இந்த ஆவணத்தில் திருத்தந்தை, தொடர்ந்து முன்னேறி வரும் சுற்றுச்சூழல் சிதைவின் தற்போதைய யதார்த்த நிலையை அடிக்கோடிட்டுக் காட்டும் 'தொழில்நுட்ப முன்னுதாரணத்தை' முன்வைக்கிறார். இது மனித பொறுப்பு, மதிப்புகள், மனசாட்சி மீது தொழில்நுட்பமும் பொருளாதார லாபமும் மேற்கொள்ளும் தவறான பார்வையை அடிப்படையாகக் கொண்டது. மனித குடும்பத்திற்கு 'வரம்புகளை அமைக்கவும், தெளிந்த மனதுடன் சுய–கட்டுப்பாட்டை கற்பிக்கவும், நல்ல நெறிமுறைகளும், கலாச்சாரமும், ஆன்மீகமும் தேவைப்படுகின்றன' (24).

**அரசியலும் காலநிலை மாநாடுகளும்:**

**இந்த இரு பகுதிகளும் இந்த ஆவணத்தின் மூன்றாம் நான்காம் பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளன. 'அன்பு, நீதி, ஒற்றுமையுடன் கூடிய நன்மை என்பது ஒரே முறையில் அடைய முடியாதவை; அவை ஒவ்வொரு நாளும் உணரப்பட வேண்டும்' (34) என்று திருத்தந்தை பிரான்சிஸ் உடனடியாக ஒப்புக்கொள்கிறார். உண்மையான முன்னேற்றத்திற்கு 'உலகளாவியப் பொது நலன், பசி-வறுமை ஒழிப்பு, அடிப்படை மனித உரிமைகளின் உறுதியான பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குவதற்கான வல்லமை கொண்ட திடமான உலக அமைப்புகள்' (35) தேவைப்படுகிறது. இத்தகையப் பயனுள்ள ஒத்துழைப்பு வலிமிகுந்து, மந்தமாக வெளிப்படுகிறது.**

**செயல்பாடுக்கான நோக்கங்கள்:**

**இந்த ஆவணத்தின் இறுதிப் பகுதி, காலநிலை நடவடிக்கையில் அர்ப்பணிப்பையும், ஈடுபாட்டிற்கான 'ஆன்மீக உந்துதல்களையும்' வழங்குகிறது. இயேசு தனது தந்தையின் படைப்புகளுக்கு முன்னரே மிகவும் உணர்திறன் உடையவராக இருந்தார்; காட்டுமலர்ச் செடிகளிடமும் (மத்தேயு 6:28-29) சிட்டுக் குருவிகளிடமும் (லூக்கா 12:6) பேசினார். உண்மையாகவே இயேசு, 'இயற்கையுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்ததால் உலகின் அழகை ரசிக்கும்படி மற்றவர்களையும் அழைத்தார்' (64) என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்.**

**முடிவுரை:**

**திருத்தந்தை பிரான்சிஸ், கடவுளின் இறையாண்மையையும் உலகளாவிய அனைத்துப் படைப்புகளிலும் உள்ள தெய்வீகத்தன்மையையும் தெளிவாக அங்கீகரிக்க, 'கடவுளைப் புகழுங்கள்!' என்றக் கட்டாயத்துடன் தொடங்கி முடிப்பது குறிப்பிடத்தக்கது. கடவுளைப் புகழுங்கள்! கடவுளை மட்டுமே! எப்போதும் கடவுளையே!**

## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ நமது தனிப்பட்ட புனிதத்தன்மையின் ஒரு பகுதியாக நமது 'சுற்றுச்சூழலைப் பராமரிக்க' திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். அந்த அழைப்பிற்கு பதிலளிக்க நான் இந்தப் பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டும்?

✦ சுற்றுச்சூழல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த என்ன உறுதியான நடவடிக்கைகளை எடுக்கலாம்? இது ஒருவரின் நம்பிக்கையை எவ்வாறு பாதிக்கும்?

## செபத் தூண்டல்:

**அன்புமிக்க இறைவா, 'எங்கள் துன்புறும் உலகை' குணப்படுத்தத் தொடங்க எங்களுக்கு உதவியருளும்...**



### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக! அல்லேலூயா!**
**திருப்பாடல் 150 : 6**

# C'est la Confiance

# இறைவனின் இரக்கமுள்ள அன்பை நம்புதல்

> புனித தெரசா நம் உலகில் மிகவும் பிரபலமான, பிரியமான புனிதர்களில் ஒருவர். அசிசியின் புனித பிரான்சிஸைப் போலவே, அவர் கிறிஸ்தவரல்லாத அவிசுவாசிகளாலும் அன்பு செய்யப்பட்டவர். மேலும் அவர், சமகால மனித குலத்தின் மிக முக்கியமான நபர்களில் ஒருவராக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டவர். பிரான்ஸ் நாட்டின் அலென்கான் நகரில் (2 ஜனவரி 1873) பிறந்த அவரின் 150வது ஆண்டு விழாவையும், அவரது அருளாளர் பட்டத்தின் நூற்றாண்டு விழாவையும் நினைவு கூரும் வேளையில், இந்த ஆவணத்தை இன்னும் ஆழமாக ஆராய்வது சாலச்சிறந்தது.
>
> C'EST LA CONFIANCE 4

## தொடக்கச் செபம்:

**விண்ணகத் தந்தையே, திருத்தந்தை பிரான்சிஸ் உடனான இந்த மகிழ்வுப் பயணத்தில் எங்களுடன் இருப்பதற்காக உமக்கு நன்றி. எங்கள் மேய்ப்பரான திருத்தந்தை பிரான்சிஸ் என்னும் கொடைக்காகவும், அவருடைய ஞானம், இரக்கம், அன்புக்காகவும் உமக்கு நன்றி. புனித தெரசாவின் முன்மாதிரியை நாங்கள் பின்பற்றி, உம்மையும் அனைவரையும் அன்பு செய்து வாழ எங்களுக்கு வரமருளும். ஆமென்.**

## ஆவணத் தொகுப்பு:

லிசியக்ஸிஸ் நகரின் புனித தெரசாவின் (1873-2023) 150வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், *C'est la Confiance (CC)* 'அது நம்பிக்கையே' என்ற தலைப்பில் திருத்தூது அறிவுரை ஒன்றைத் திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார். இது 'இறைவனின் இரக்கமுள்ள அன்பில் பற்றுறுதி கொள்தல்' என்றத் துணைத் தலைப்பைக் கொண்டுள்ளது.

### தெரசாவின் அறிமுகம்:

பல திருத்தந்தையர்களுடன் தொடர்பிலிருந்த 'புனித தெரசா நம் உலகில் மிகவும் பிரபலமான, பிரியமான புனிதர்களில் ஒருவர்' (4) என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். திருத்தந்தை 13ம் லியோ அவரின் 15 வயதில் கார்மேல் சபையில் நுழைய அனுமதித்தார். 30 செப்டம்பர் 1897 அன்று 24ம் வயதில் காசநோயால் அவர் இறந்தார்.

28 ஆண்டுகளுக்குப் பிறகு, 1925ம் ஆண்டில், திருத்தந்தை 9ம் பயஸ் அவரைப் புனிதராக அறிவித்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மறைப்பணியாற்றுவோரின் பாதுகாவலராக அவரை நியமித்தார். 1997ல் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவரை திருஅவையின் மருத்துவராக அறிவித்தார். 2015ம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ், குடும்பம் பற்றிய ஆயர்கள் ஒன்றித்தலின் போது அவரது பெற்றோர்களான லூயிஸ், செலி மார்ட்டின் ஆகியோருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். அக்டோபர் முதல் நாள் அவரது திருவிழாவாகும்.

### ஒரு ஆழமான ஆன்மீகம்:

தெரசாவின் இறப்புக்குப் பின் வெளியிடப்பட்ட 'ஒரு ஆன்மாவின் கதை' என்ற அவரது சுயசரிதை, தெரசா மீதான ஆர்வத்தைப் பரவலாகத் தூண்டியது. ஆன்மீக வாழ்வில் அவளது தனித்துவமான நுண்ணறிவுகளை இது விவரிக்கிறது. தெரேஸின் செய்தி 'திருஅவையின் ஆன்மீகக் கருவூலத்தின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்' (4) என்பது திருத்தந்தை பிரான்சிஸின் விருப்பம். திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் தெரசாவை 'அன்பின் அறிவியல்' நிபுணர் என அழைத்ததாக பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

'அவரது ஒரு ஆன்மாவின் கதையின் இறுதிப் பக்கங்கள், நற்செய்தி அறிவிப்பு ஒரு ஈர்ப்பினால் நடைபெறுகிறதே தவிர அழுத்தத்தாலோ மதமாற்றத்தாலோ அல்ல என்று மறைப்பணியாற்றலின் சாட்சியாக வெளிப்படுத்திப் பாராட்டுகிறார்' (10) என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். ஆன்மா இயேசுவிடம் ஈர்க்கப்பட்டால், அது 'உங்கள் அன்பின் கரையற்ற கடலில் மூழ்கிவிடும்' (10) என்று தெரசா நம்புகிறார். 'குறிப்பாக அவள் இறந்த பிறகு இது தான் நடந்தது. அது அவளுக்கு வாக்களிக்கப்பட்ட 'ரோஜாக்களின் மழை' (13)'. என பிரான்சிஸ் வலியுறுத்துகிறார்.

## அன்பை நம்ப சிறு வழி:

தெரசா தனது ‘சிறு வழியை’ விவரிக்க அவரது ‘ஒரு ஆன்மாவின் கதையில்’ மின்தூக்கியின் படத்தைப் பயன்படுத்தியுள்ளார். ‘இயேசுவே! என்னை விண்ணகத்திற்கு உயர்த்த வேண்டிய மின் தூக்கி உமது கரங்களே. இதற்காக, நான் வளர வேண்டிய அவசியம் இல்லை, மாறாக நான் சிறிதாக இருந்து மென்மேலும் உயர வேண்டும்’ (16). ‘சிரியவளான தெரசா, தன் மீது தன்னம்பிக்கை கொள்ளாமல், இறைவனின் கரங்களின் வல்லமையான அன்பில் உறுதியானப் பற்று கொண்டிருந்தாள்’ (16) என பிரான்சிஸ் உறுதிப்படுத்துகிறார்.

தெரசா தனது சிறப்புப் பணிவாழ்வை கண்டடைந்த போது மகிழ்ச்சியில் மெய்மறந்தாள். ‘அன்பே என் பணிவாழ்வு. ஆம், என் தாயாகிய என் திருஅவையின் இதயத்தில் நான் அன்பாக இருப்பேன். இவ்வாறு, நான் எல்லாமுமாக இருப்பேன், என் கனவும் நனவாகும்’ (39). ‘இதுவே தெரசாவின் தீவிர விருப்பமும், அவளது திட்டவட்டமானத் தொகுப்பும், ஆழ்ந்த ஆன்மீக அடையாளமுமாகும்’ (41).

## பிரான்சிஸின் இறுதி செபம்:

‘அன்புள்ள புனித தெரசாவே, திருஅவை, நற்செய்தியின் ஒளியைப் பிரகாசிக்கவும், நறுமணத்தைப் பரப்பவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும் வேண்டும். உமது ரோஜா மலர்களை எங்களுக்குத் தாரும்! உம்மைப் போலவே, கடவுள் நம் மீது வைத்திருக்கும் அபரிமிதமான அன்பில் எப்போதும் நம்பிக்கையுடன் இருக்க எங்களுக்கு உதவியருளும். இதனால் ஒவ்வொரு நாளும் நாங்கள் உமது ‘சிறு வழியை’ பின்பற்றுவோமாக. ஆமென்’ (53).


## சிந்தனைக்கானக் கேள்விகள்:

✦ புனித தெரசாவின் ‘சிறு வழியை’ பின்பற்றி, ஆன்மீகப் பெருமையைத் தவிர்க்க உதவும் மனத்தாழ்ச்சியின் எடுத்துக்காட்டுகள் யாவை?

✦ புனித தெரசாவின் ‘சிறு வழியை’ ஆழமாகப் பின்பற்ற ஏன் பல சாதாரண மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள்? நமது சமகால சமூகத்திற்கு புனித தெரசா எத்தகைய நற்பண்புகளை கற்பிக்க முடியும்?

## செபத் தூண்டல்:

**அன்புள்ள புனித தெரசாவே, உமது அன்பான ரோஜா மலர்களைப் பரப்ப எங்களுக்கு உதவியருளும்...**



“St Thérèse of Lisieux”, by Lawrence OP

### நினைவில் கொள்ள ஒரு இறைவார்த்தை

**ஆண்டவர் என் வலிமை, என் கேடயம்;
அவரை என் உள்ளம் நம்புகின்றது.
திருப்பாடல் 28 : 7**

# இறுதித் தொகுப்பு

**நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடனான பன்னிரண்டு படிகளைக் கொண்டத் திருப்பயணம் ஒரு வளமான அனுபவமாக இருந்திருக்கும். பலனளிக்கும் இப்பயணத்தில் திருத்தந்தையின் கருத்துக்கள் பல வெளிவந்துள்ளன.**

## ✦ இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை நடைமுறைப்படுத்துதல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம். சங்கத்தின் ஆர்வத்தை மீண்டும் கண்டறிந்து, சங்கத்தின் மீதான நமது சொந்த ஆர்வத்தைப் புதுப்பிப்போம்' இரண்டாம் வத்திக்கானின் அழைப்பாளர் புனித 23ம் யோவானின் விழாவைக் கொண்டாடுகையில், பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

## ✦ மறைப்பணியாற்றும் மக்களாக மாறுதல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம். சங்கத்தின் ஆர்வத்தை மீண்டும் கண்டறிந்து, சங்கத்தின் மீதான நமது சொந்த ஆர்வத்தைப் புதுப்பிப்போம்' இரண்டாம் வத்திக்கானின் அழைப்பாளர் புனித 23ம் யோவானின் விழாவைக் கொண்டாடுகையில், பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

## ✦ நமது பொதுவானத் தாயகத்தைப் பராமரித்தல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம். சங்கத்தின் ஆர்வத்தை மீண்டும் கண்டறிந்து, சங்கத்தின் மீதான நமது சொந்த ஆர்வத்தைப் புதுப்பிப்போம்' இரண்டாம் வத்திக்கானின் அழைப்பாளர் புனித 23ம் யோவானின் விழாவைக் கொண்டாடுகையில், பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

## ✦ இரக்கமுள்ள வாழ்வை வாழ்தல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம். சங்கத்தின் ஆர்வத்தை மீண்டும் கண்டறிந்து, சங்கத்தின் மீதான நமது சொந்த ஆர்வத்தைப் புதுப்பிப்போம்' இரண்டாம் வத்திக்கானின் அழைப்பாளர் புனித 23ம் யோவானின் விழாவைக் கொண்டாடுகையில், பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

## ✦ உண்மையானப் புனிதத்தைத் தேடுதல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம். சங்கத்தின் ஆர்வத்தை மீண்டும் கண்டறிந்து, சங்கத்தின் மீதான நமது சொந்த ஆர்வத்தைப் புதுப்பிப்போம்' இரண்டாம் வத்திக்கானின் அழைப்பாளர் புனித 23ம் யோவானின் விழாவைக் கொண்டாடுகையில், பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

## ✦ திருஅவையைச் சமூகமாக அனுபவித்தல்

திருத்தந்தை பிரான்சிஸ் புதுப்பித்தலுக்கான வத்திக்கான் சங்கத்தின் தொலை நோக்கை திருஅவையின் இதயத்திற்குத் தெளிவாக கொண்டு வர முயன்றார். 'சங்கத்தின் தூய்மையான அன்பின் ஆதாரங்களுக்குத் திரும்புவோம்.

## ✦ இறுதி அழைப்பு

நடைபயிற்சி நமது உடல் நலத்தை மேம்படுத்த உதவும் என நாம் அனைவரும் அறிவோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் ஒரு நீண்ட நடைப்பயணத்திற்கு நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்; அது உங்கள் ஆன்மீக நலனுக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும், இது நம்பிக்கையின் ஒரு மகிழ்வானப் பயணமாக என்பதை நீங்களும் கண்டறிவீர்கள்!

# மேலும் எதை நாங்கள் இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும்?

இந்தக் கையேட்டைப் பயன்படுத்திமைக்கு நன்றி!
நீங்களும் உங்கள் சமூகமும் நம்பிக்கையில் வளர
இந்தச் சிந்தனைக் கையேடு உதவியுள்ளது என நம்புகிறோம்.
இந்தக் கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ததா?
எதிர்கால கையேடுகளில் வேறு என்ன எதிர்பார்கிறீர்கள்?
உங்கள் கருத்து எங்களுக்கு மிகவும் முக்கியம்.

கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து, எங்கள் பணியை மேலும் சிறப்பாக்க எங்களுக்குக் கருத்தளித்து உதவுங்கள். நன்றி!

# நன்றியறிவிப்புகள்

## ஆசிரியர் குழு

ஆக்னெஸ் ஙௌ
ஆர்தர் கோ
கேஸில்டா லிம்
ஃபெய்த் ஆலைவ் புக்ஸ்
ஜாக்குலின் ஃபிளெட்சர்
ஜெர்விஸ் காங்க்
லூயி வான் சூ
அருள்தந்தை ஜேம்ஸ் க்ரோகர் MM
அருள்தந்தை டெரன்ஸ் பெரெய்ரா
பேரருள்தந்தை ஜேம்ஸ் இயோ
பேரருள்தந்தை ஸ்டீபன் இம்
வேலரி சியூ
வெனசா சான்

## வடிவமைப்பு

ஜெஸ்லின் சியா

**மொழிபெயர்ப்பு:** சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம்

**புகைப்படங்கள்:** Catholic.sg Flickr • Shutterstock • Unsplash

செப்டம்பர் 2013ம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய நற்செய்தி அறிவிப்புக்கான அலுவலகம் (ONE) சிங்கப்பூரின் உரோமைக் கத்தோலிக்க உயர்மறைமாவட்டத்தில் உள்ள ஒரு அமைப்பாகும். இது ஒரு துடிப்பான, நற்செய்தி அறிவித்து, மறைபரப்பும் திருஅவையாக நாம் இருக்க வேண்டும் என்ற நமது பேராயரின் தொலைநோக்கை நனவாக்குகிறது.

புதிய நற்செய்தி அறிவிப்பின் ஊக்கியாக, திருமுழுக்குப் பெற்றக் கத்தோலிக்கர்களை மறைபரப்பும் சீடர்களாக மாற்றுவதற்கான செயல்முறைகளையும் முன்முயற்சிகளையும் எளிதாக்குவதே இதன் பணி.

சிங்கப்பூர் கத்தோலிக்க இறையியல் நிறுவனம் (CTIS) இறையியலைக் கற்றுக் கொள்ள மிகவும் முறையான அணுகுமுறையை விரும்பும் உள்ளூர் கத்தோலிக்கர்களுக்குத் தத்துவம், விவிலியம் மற்றும் இறையியல் ஆகிய துறைகளில் கல்வியை வழங்குகிறது.

CTIS ஆனது, புனித பிரான்சிஸ் சேவியர் குருகுலத்துடன் இணைந்து துறவற வாழ்வுக்குத் தங்களை அர்ப்பணித்துள்ள இளையோருக்கும் மற்ற இறை சபையினருக்கும் பயிற்சி அளித்து வருகிறது.

இந்த முயற்சிக்குக் கத்தோலிக்க அறக்கட்டளை அமைப்பின் GIFT திட்டம் ஆதரவளிக்கிறது.